# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 81 — 1973 ඔක්තෝබර් 12 වැනි සිකුරාදා — 1973.10.12

81 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (II அ) — விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் ... ... ... ... | 1075 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | ... 1092 |


## பதவிகள் — வெற்றிடம்

### இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத் தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள்**

1 : 1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். "இலங்கையர்" என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தில் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1 : 2 ஏதாவது ஒரு பதவிக்கான வேட்பாளர், அப் பதவிக்கு சிரேட்ட தாராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அல்லது அதனினும் உயர்வான பரீட்சையில் சித்தியடைந்திருப்பது ஆகக் குறைந்த கல்வித் தகைமையென விதிக்கப்பட்டிருக்கு மிடத்து, சிங்கள மொழி மூலம் கல்வி பயின்ற சிங்களவராக இருப்பின் அவர் சிரேட்ட தாராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சிங்கள மொழியில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். (1961 ஜனவரி 1 க்கு முந்திய ஒரு திகதியிலிருந்து அரச சேவையில் இருப்போருக்கும் அரச சேவையில் உள்ள பிற பதவிகளுக்கு நியமனத்தை நாடும் அத் தகையோருக்கும் இத் தேவை ஏற்புடைத்தாகாது.)

1 : 3 விதிக்கப்பெற்ற சிங்கள வினைத்திறமைத்திறன் தேர்வினில் சித்தி எய்தத் தவறியமைக்காக தகுதிகூர்/சோதனைக்கான நியமனங்கள் நிறுத்தி வைக்கப்பட்ட "புதிதாகச் சேர்ந்த" அரச உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அப்படி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமாயின் 640 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்தின் நியதிகளுக்கமைவாக விதிக்கப்பெற்ற உயர்ந்த சிங்கள வினைத்திறன் தேர்விலிருந்து விலக்களிக்கும் உரிமையை அவர்களுக்குக் கொடுக்கத்தக்க தகைமையை அவர்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

**2. படிகள்**

2 : 1 அரச சேவையில் உள்ள திருமணமான உத்தியோகத்தர்களுக்கு அவர்களது பதவிகளுக்கு ஏற்புடைய திரட்டிய மாத வேதனத்துடன் மேலதிகமாக தாபனக் கோவையின் vii ஆம் அத்தியாயத்தின் I ஆம் பிரிவில் தரப்பட்டபடி விவாகப் படியும் வழங்கப்படும்.

2 : 2 மாத வேதனம் பெறும் அரச உத்தியோகத்தர்கள், அவர்கள் 180 ரூபாவிலிருந்து 250 ரூபா வரையில் (சகல படிகளும் உட்பட) வேதனமாக/கூலியாகப் பெறும் தொகுதியினரைச் சேர்ந்தவராகின், அவர்களுக்கு விசேட படியாக ரூபா 7.50 கொடுக்கப்படும். அது தேவையானவிடத்து சரிசெய்யப்படுவதற்கு உள்ளாகும்.

---

**முக்கிய அறிவித்தல்**

*இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி பகுதி I : தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.*

*எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்*
*கொழும்பு,*
*1972 ம் ஆண்டு டிசெம்பர் மீ 15 ந் உ.*

**3. சேவை நிபந்தனைகள் : பொது**

3 : 1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விடுக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

3 : 2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

3 : 3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**4. நிரந்தரப் பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடைத்தாகும் சேவை நிபந்தனைகள்**

4 : 1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :—

4 : 1 : 1 சகல நியமனங்களும், ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய, மூன்று வருடத்துக்குத் தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் ஏதும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

4 : 1 : 2 அரசாங்க சேவையில் " புதிதாகச் சேர்ந்த " அரச உத்தியோகத்தர்கள் யாவரும் அரசாங்கத்தின் அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்துக்காக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் செய் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் தற்போதுள்ள எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அல்லது அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கு பயன் ஏற்படும் வண்ணம் இனிமேல் புகுத்தக்கூடிய சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அமையுமாறு வேண்டப்படுவர்.

4 : 1 : 3 சகல அரச உத்தியோகத்தர்களும், தமது தகுதிகூர் காலத்தின்போது அரசகரும மொழியில் வேலை செய்யும் அறிவைப் பெற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுவர்.

4 : 1 : 4 தகுதிகூர் காலம் நிறைவு எய்திய பின்பு பதவியை உறுதி செய்வது, பிறவற்றுள் நியமனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து முதலாவது வருடத்தினுள் முதலாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதினும் இரண்டு வருடத்தினுள் இரண்டாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எதுவதினும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடத்தினுள் மூன்றும் தரச் சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதினும் தங்கியுள்ளது. ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம், விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 4 : 1 : 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுள் ஏற்புடைத்தாகும் அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

4 : 1 : 5 தகுதிகூர் நிலைக்கால முடிவு வரையில் சிங்கள மொழியில் விதிக்கப்பெற்ற வினைத்திறனை அடையாவிட்டால் தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 12 : 13 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரயோகமாகும்.

4 : 1 : 6 சிங்கள மொழி மூலம் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள் மீது 4 : 1 : 3 ஆம் 4 : 1 : 4 ஆம் 4 : 1 : 5 ஆம் பிரிவுகள் பிரயோகிக்கப் படமாட்டா.

4 : 1 : 7 அரச சேவையின், நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதி செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்கவேண்டியதில்லை.

4 : 1 : 8 தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அறிவதற்கு அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவ பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**5. நியமன நியதிகள்**

5 : 1 அரச சேவையில், நிரந்தரமான பதவிகளிலாயினும் மாதச் சம்பளமுள்ள தற்காலிக பதவிகளிலாயினும் 1.1.72 க்குப் பின்பு நியமனம் பெற்ற அரச உத்தியோகத்தர்கள் (நாட் சம்பளம் கொடுக்கப்படுபவர்கள் நீங்கலாக) யாவரும் தமது திரட்டிய வேதனத்தின் 6 சதவீதத்தை அரசாங்க சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்துதல் வேண்டும். அரசாங்கம் நிதியாண்டின் இறுதியில் கொடுக்கப்படும் திரட்டு வேதனத்தின் 9 சதவீதத்தைக் கொடுத்துதவும். அத்தகைய பதவியை வகிப்பவர் (அவர் விரும்பினால்) அவரது மாதத்திரட்டு வேதனத்திலிருந்து 6 சத வீதம் வரையில் அவரது விருப்பப்படி, சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்தலாம். ஆனால் அத்தகைய உதவு தொகை மீது அரசாங்கம் எந்தவித தொகையும் செலுத்தாது.

5 : 2 1971.12.31 க்கு முன்பு அரச சேவையில் ஓய்வூதியமுள்ள நிரந்தரமான பதவிகளை வகித்த அரச உத்தியோகத்தர்கள் 1972.1.1 க்குப் பின்பு அச்சேவையில் உள்ள நிரந்தரமான பதவிகளில் நியமிக்கப்பட்டால் அவர்கள் அவர்களது ஓய்வூதிய உரிமைகளை வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்படுவார். அத்தகைய அரச உத்தியோகத்தர்கள் முன்பு போல விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கு பணம் செலுத்துதல் வேண்டும்.

**6. யுத்த சேவைச் சலுகை**

6 : 1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப் படைகளில் சேவையாற்றியவர்களும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர் பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள், அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காது

விடின், 1939 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் உள்ள அச் சேவைக் காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1946 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன், அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருந்திருத்தல் வேண்டும்.

**7. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்**

7 : 1 எல்லாத் தகைமைகளேயும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

7 : 2 வேட்பாளர்கள், குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

7 : 3 ஒரு வேட்பாளரைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய வேட்பாளரைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

7 : 4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப் பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவு செய்யப்பட்ட பின்பு அப் பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

7 : 5 விளம்பரத் தேவைகளுக்கு அமைவுபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**8. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை**

8 : 1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும்; அதில், பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### வெற்றிடங்கள்

சபையின் சேவையில் பின்வரும் பதவிகட்கான விண்ணப்பங்கள் இலங்கைப் பிரசைகளிடமிருந்து கோரப்படுகின்றன.

**கணக்காளர்—III ஆம் தரம்**

சம்பள அளவுத் திட்டம்—(எல்லாம் உட்பட மாதமொன்றுக்கு) ரூபா 1100/—50×12—ரூபா 1700/. ரூபா 1350 க்கு முன்பு வினைத்திறமைகாண் தடையுண்டு.

***தகைமைகள்***

(அ) வயது—1973.10.25 ஆந் தேதியன்று 27 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவராகவிருக்கவேண்டும்.

(ஆ) தத்துவம் பெற்ற கணக்காளராயிருப்பதுடன், அதன் பின்பு ஆகக் குறைந்தது இரண்டு ஆண்டு கால அனுபவமும் இருத்தல் வேண்டும்.

(இ) சிங்களத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் மேலதிக தகைமையாகவிருக்கும்.

***கடமைகள்***

கடமைகள், ஏனையவற்றுடன் அமைப்பின் நிதி விடயங்களுக்குப் பொறுப்பாயிருத்தல் உட்படும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர், நடைமுறைகளையும் முறைகளையும் புகுத்தும்படி அல்லது திருத்தும்படியும் எதிர்பார்க்கப்படுவர். அவர்கள் செயலூக்க ஆற்றல் கொண்டவர்களாகவும் பயன் விளைவிக்கக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.

**2. மருத்துவ உத்தியோகத்தர்—III ஆம் தரம்**

சம்பள அளவுத் திட்டம்.—(எல்லாம் உட்பட மாதமொன்றுக்கு) ரூபா 1100/—50×12—ரூபா 1700/-. ரூபா 1350/- க்கு முன்பு வினைத்திறமைகாண் தடையுண்டு.

***தகைமைகள்***

(அ) வயது—1973.10.25 ஆந் தேதி 27 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவராகவிருக்கவேண்டும்.

(ஆ) எம். பி. பி. எஸ். (இலங்கை) பட்டமும் அதன் பின்பு ஆகக் குறைந்தது 3 ஆண்டு கால அனுபவமும் இருத்தல் வேண்டும்.

**3. உதவி மருத்துவத் தொழில்புரிபவர் ("மெடிக்கல் பிறக்றிஷனர்") —V ஆம் தரம்**

சம்பள அளவுத் திட்டம்.—(எல்லாம் உட்பட மாதமொன்றிற்கு) ரூபா 600/—40×10—ரூபா 1000/- ரூபா 800/- க்கு முன்பும், ரூபா 920/- க்கு முன்பும் வினைத்திறமைகாண் தடைகளுண்டு.

(அ) வயது—1973.10.25 ஆம் தேதியன்று 25 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவராகவிருக்கவேண்டும்.

(ஆ) இலங்கை மருத்துவக் கல்லூரியின் அப்போத்திக்கரிப் பரீட்சையில் சித்தியெய்தியிருப்பதுடன் ஆகக் குறைந்தது 3 ஆண்டு அனுபவமும் இருத்தல் வேண்டும்.

4. (அ) அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களைத் தத்தமது திணைக்களங்கள் மூலமாக அனுப்பிவைக்கவேண்டும். அவர்களை, தற்போது அவர்கள் கடமையாற்றும் திணைக்களத் தலைவர்கள் 1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் நியதிகளிற்கு ஏற்பச் சபையில் வேலையாற்ற விடுவிப்பதற்கு உடன்பட ஆயத்தமாயிருந்தால் மட்டுமே அவர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படும்.

(ஆ) விளம்பர நியதிகட்கேற்பக் கூட்டுத்தாபனங்களிலுள்ள தகைமையுடைய உத்தியோகத்தர்கள் நியமனத்திற்குத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அவர்கள் தற்போது கடமையாற்றும் கூட்டுத்தாபனத் தலைவர் அல்லது பொது முகாமையாளர், அவர்களை விடுவிப்பதற்கு உடன்பட ஆயத்தமாயிருந்தால் மட்டுமே, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படும். கூட்டுத்தாபன மூலமாகவே விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டும்.

5. வேலை நிபந்தனைகள்.—தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் முதலில் 3 வருடத் தகுதிகாண் நிலையில் நியமிக்கப்படுவார்கள். அவர்கள்.—

(1) நியமனத்திற்கு முன்பு வைத்தியப் பரிசோதனைக்கு ஆளாகி உடல் உறுதியுள்ளவர்களென சித்தியெய்த வேண்டும்.

(2) ஏற்கனவே இயற்றப்பட்டுள்ளதும், இனிமேல் இயற்றப்படக் கூடியதுமான, சபையின் விதிகளுக்கும், பிரமாணங்களுக்கும் இயைய நடத்தல் வேண்டும்.

(3) தங்களுடைய தகுதிகாண் நிலைக் காலத்தில் அரசாங்க மொழிக்கொள்கையை நடைமுறையிற் கொண்டுவருவதற்குச் சபையால் விதிக்கப்பட்ட தாரதர அளவிற்குச் சிங்கள மொழியிற் தேர்ச்சி பெறவேண்டும்.

(4) தங்களது சம்பளத்தில் 6 சத விகிதத்தைச் சபையின் சேம லாப நிதிக்குச் செலுத்த வேண்டும். சபை 9 சத விகிதத்தைச் செலுத்தும்.

(5) இலங்கையில் எப் பகுதியிலேனும், சபையின் எப் பிரிவிலேனும் சேவையாற்ற வேண்டும்.

6. கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள படிவத்திற்கேற்ப விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 1973-10-25 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக, கொழும்பு-5, நாரகேன்பிட்டி, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள ஆளணி முகாமையாளருக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

ஆளணி முகாமையாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி,
நாரகேன்பிட்டி,
கொழும்பு-5.

### இலங்கைப் போக்குவரத்துச் சபை

#### விண்ணப்பப் படிவம்

1. விண்ணப்பிக்கப்படும் பதவி :————.
2. பரீட்சார்த்தியின் முழுப் பெயர் :————.
3. அஞ்சல் முகவரி :————.
4. பிறந்த திகதி :————.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்று—மூலப் பிரதியல்ல இணைக்கப்பட வேண்டும்).
5. 1973-10-25 ஆந் திகதியன்று சரியான வயது :—
வருடங்கள் :————. மாதங்கள் :————. நாட்கள் ————.
6. நீர் இலங்கைப் பிரசையானது வம்சாவழியாகவா அல்லது பதிவு மூலமாகவா ? :————.
7. விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா ? :————.
(விவாகம் செய்தவராயின் விவாகம் செய்த திகதியும் பிள்ளைகளின் தொகையும் அவர்களின் வயதும்).
8. உயர்நிலைப் பாடசாலைக் கல்வி :————.
(படித்த பாடசாலைகள், சித்தியெய்திய பரீட்சைகள் ஆகியவற்றைத் திகதிகளுடன் தருக).
9. உயர் கல்வி (படித்த நிலையங்கள், சித்தியெய்திய பரீட்சைகள், உயர் தொழில் தகைமைகள் ஆகியவற்றைத் திகதிகளுடன் தருக. சான்றிதழ்களின் பிரதிகள் (மூலப் பிரதிகள் அல்ல) இணைக்கப்படவேண்டும்) :————.
10. தொழில் நுட்ப உயர் தொழிற் தகைமைகள் :————.
(படித்த நிலையங்கள், சித்தியெய்திய பரீட்சைகள், பெற்ற தகைமைகள் ஆகியவற்றைத் திகதிகளுடன் தருக. சான்றிதழ்களின் பிரதிகள் (மூலப் பிரதிகள் அல்ல) இணைக்கப்படவேண்டும்).
11. தொழில் :————.
(பாடசாலை விட்டு விலகிய பின் பார்த்த வேலைகளின் விபரம் அதாவது பதவிப் பெயர், வேலைகொள்வோரின் பெயர், நியமனத் திகதி, விலகிய திகதி, விலகுவதற்கான காரணங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுக).
12. அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையில் அல்லது வர்த்தக நிலையங்களில் நிறைவேற்றுப் பதவிகளில் உயர் தொழில் பயிற்சி அல்லது அனுபவம். (வகித்த பதவிகள், வேலையின் தன்மை, எல்லாம் உட்பட்ட சம்பளம் ஆகியவற்றைத் திகதிகளுடன் குறிப்பிடுக):————.
13. விண்ணப்பிப்பதற்கு ஆதாரமான விசேட உரிமைகள் (இப் பதவிக்கு உங்கள் தகுதியை உயர்த்தக்கூடிய மேற்கூறிய எப்பதவியிலேனும் செய்த வேலையின் விவரங்களைச் சுருக்கமாகத் தருக) :————.
14. சிங்களத்தில் எய்தியுள்ள ஆகக்கூடிய தாரதரம் :————.
15. இதற்கு முன்னர், இலங்கைப் போக்குவரத்துச் சபையில் ஏதாவது பதவிக்கு நீர் விண்ணப்பித்தீரா ? விண்ணப்பித்திருப்பின் முடிவுகள் யாவை ? :————.
16. வேறேதேனும் விபரங்கள் :————.
17. சட்ட நீதிமன்றத்தில் கிறிமினல் குற்றங்கள் எதற்கேனும் குற்றவாளியாகக் காணப்பட்டீரா ? :————.
அங்ஙனமாயின் விவரங்கள் தருக :————.
18. விண்ணப்பதாரர் பற்றிய தகவல்கள் பெறக்கூடிய இருவரது பெயர்களும் முகவரிகளும் :————.

(1)
(2)

'இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவையெனவும், இதன்கண் தரப்பட்டுள்ள விடயங்கள் பிழையானவையாகவோ, சரியற்றவையாகவோ தெரிவிற்கு முன் காணப்பட்டால் தகுதியற்றவரென நீக்கப்படுவதற்கும் தெரிவிற்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு இன்றி உத்தியோகத்திலிருந்து விலக்கப்படுவதற்கும் இடமுண்டு என்பதையும் நான் நன்கறிவேனெனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

————,
திகதி :————. விண்ணப்பகாரரின் கையொப்பம்.

10-392—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81.

---

### சிறு கைத்தொழிற்றிணைக்களம்

#### கைப்பணி வடிவ அமைப்பாளர் பதவி

சிறு கைத்தொழிற்றிணைக்களத்திற் கைப்பணி வடிவ அமைப்பாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் இலங்கைக் குடிகளிடமிருந்து வேண்டப்படுகின்றன. கீழ்க்காணப்படும் மாதிரிப் படிவத்திலுள்ள வாறமைந்த படிவத்தில் விண்ணப்பங்கள் 1973 ம் ஆண்டு நவம்பர் மாதம் 01 ந் தேதியன்றோ அதன் முன்போ என்னை வந்தடைதல் வேண்டும்.

2. சம்பள அளவுத்திட்டம்.—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத் திட்டம் ஆண்டொன்றுக்கு ரூபா 6,024—144×4—180×8—8,040 ஆகும். (வினைத்திறமைகாண் தடைகள் ரூபா 6,780 க்கும் ரூபா 7,500 க்கும் முன்பாகும்)

3. நியமன நியதிகள்.—
(i) பதவி நிலையானது
(ii) உபகாரச் சம்பள உரித்தற்றது
(iii) அரசாங்க சேவைச் சகாய நிதிக்கு உதவுதொகை செலுத்தப்பட வேண்டும்.

4. கல்வித் தகைமைகளும் மற்றைய தகைமைகளும்.—

ஒவ்வொரு விண்ணப்பகாரரும் தான்—

(அ) சிங்களம்/தமிழ், எண்கணிதம்/கணிதம், சித்திரம் உட்பட ஆறு பாடங்களில் இரு தடவைகட்கு மேற்படாது தோற்றிக் கல்விப் பொதுத் தராதர (சாதாரண)ப் பரீட்சையிற் சித்தியெய்தியுள்ளாரெனவும் அல்லது அதற்குச் சமமான அல்லது உயர்ந்த பரீட்சையிற் சித்தியெய்தியுள்ளாரெனவும்;

(ஆ) மரஞ்செதுக்கல், முகமூடி, அரக்குச் சாயவேலை, மூங்கில், கொம்பு, பிரம்பு வேலைகளிற் பத்து வருடங்கட்குத் குறையாத அனுபவம் பெற்றுள்ளாரெனவும்;

(இ) மேற்குறிப்பிட்டுள்ள கைப்பணிகட்குப் புதிய வடிவ அமைப்புக்களைப் புகுத்துவதில் விசேட திறமையுள்ளவரெனவும்;

(ஈ) மிகச் சிறந்த குணப்பண்பும் உடனலமுமுள்ளவரெனவும்;

(உ) 1973 ம் ஆண்டு நவம்பர் மாதம் 01 ந் தேதியன்று 25 வயதுக்குக் குறைந்தவரல்லரெனவும் 45 வயதுக்கு மேற்பட்டவரல்லரெனவும் (இம்மேல் வயதெல்லை ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளோர்க்கு ஏற்புடைத்தன்று) திருப்திகரமான சான்று சமர்ப்பித்தல் வேண்டும்.

5. விண்ணப்பக்காரர்கள் தமது விண்ணப்பங்களுடன் கீழ்க்காணும் சான்றிதழ்களின் படிகளை இணைத்தல் வேண்டும். (இப் படிகள் திருப்பிக் கொடுக்கப்படமாட்டா)

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (கவனிக்கவும்.—ஞானதீட்சைச் சான்றிதழ்களோ. அன்றி, உதவி பெறும் பாடசாலைகளின் பிரமாணச் சட்டக்கோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்களோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

(ஆ) மிகவுயர்ந்த கல்வித்தகைமைச் சான்றிதழ்

(இ) மிக அண்மைக் காலத்துக் குணச் சான்றிதழ்கள் மூன்று

(ஈ) தொழினுட்ப அல்லது தொழில் முறைத் தகைமைச் சான்றிதழ்.

(மேலே அ, ஆ, இ, ஈ ஆகிய உப்பந்திகளிற் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை வேண்டப்படும்போது சமர்ப்பிக்கத் தவறும் வேட்பாளர்களின் விண்ணப்பங்கள் கவனத்திற்கெடுக்கப்படமாட்டா)

6. அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சி மன்றங்களிற் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தத்தந் திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படுதல் வேண்டும்.

7. கொழும்பில் நடைபெறவிருக்கும் நேர்முகப் பரீட்சையொன்றுக்கு விண்ணப்பகாரர்கள் தமது சொந்தச் செலவிலேயே சமூகமளித்தல் வேண்டும்.

8. விண்ணப்பத்திற் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் சரியற்றவையெனத் தெரிவுக்குமுன் கண்டு பிடிக்கப்படின் விண்ணப்பகாரர் தகைமையற்றவராகக் கருதப்படுவதுடன், தொழிலுக்குப் பின் கண்டு பிடிக்கப்படின் பதவி நீக்கம் செய்யப்படுவதற்கும் ஆளாவார்.

9. வர்த்தமானியின் பகுதி I பிரிவு (II அ) ன் முற்பகுதியில் வெளியிடப்பட்டுள்ள அரச சேவைப் பதவிகட்காய நியமனங்கட்கு ஏற்புடைய பொது நிபந்தனைகட்குத் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

ஜி. பி. ஹத்தொட்டுவ,
பிரதிப் பணிப்பாளர் (முகாமை),
சிறு கைத்தொழிற் பணிப்பாளருக்காக.

சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ந் திகதி.

சிறு கைத்தொழிற்றிணைக்களம்

கைப்பணிவடிவ அமைப்பாளர் பதவிக்கான மாதிரி விண்ணப்பப் படிவம்

(கவனிக்கவும்.—விண்ணப்பத்தைத் தாங்கும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "கைப்பணி வடிவ அமைப்பாளர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிக்கப்பட்டு, அது பதிவுத் தபாலில் சிறு கைத்தொழிற் பணிப்பாளர், ஹேமாஸ் கட்டிடம், கொழும்பு 1, என முகவரியிடப்பட வேண்டும்.)

1. முழுப் பெயர் :————.

2. முகவரி :————

3. பிறந்த திகதியும் இடமும் :————.
(பிறப்புப் பதிவுச் சான்றிதழின் படி இணைக்கப்பட வேண்டும்)

4. நாட்டினம் :————.

5. மணமானவரா, தனியாளா ? :————.

6. கல்வித் தகைமைகள் அல்லது தொழின் முறைத் தகைமைகள் அல்லது இவையிரண்டும் :————.

7. கல்விக்கூடத்தை விட்டு விலகியதிலிருந்து செய்த தொழில் அல்லது பெற்ற பயிற்சிகளின் அல்லது இவையிரண்டினதும் விபரங்கள் :————.

8. அரசாங்கத் திணைக்களமொன்றிலோ, கூட்டுத் தாபனமொன்றிலோ கடமையாற்றியிருப்பின் தொழிலை நிறுத்தியதற்கான காரணங்கள் கூறப்பட வேண்டும் :————.

9. எப்பொழுதாவது குற்றமலியற்றவரெதற்காகவேனும் ஒரு நீதிமன்றத்தில் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின் அக்குற்றத்தினதும் தண்டனையினதும் விபரங்களைக் குறிப்பிடவும் :————.

10. குணச்சான்றிதழ்கள் பெறப்பட்ட மூவரின் பெயர்களும், பதவிப் பெயர்களும் :————.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

6-406—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81

---

### கண்டி மாவட்டத்தில் ஹட்டன் பிரிவிற்கு பிறப்பு, இறப்பும் உடபுளத்கம பிரிவிற்கு விவாக (பொது—கண்டியர்) பதிவாளர் பதவி

ஹட்டன் பிறப்பு, இறப்பு பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள் அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள், அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக் கூடியவர்கள், ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்கு குறையாதவர்களாயின், மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களை பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்கள், ஏனைய பிற தராதரங்கள் நிபந்தனை ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகத்திலும், கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சிச் சபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவு ஸ்தாபன நிலையங்களிலும், இந்தப் பிரிவிற்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்புவதோடு 1973 ம் ஆண்டு நொவம்பர் மாதம் 2 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

சி. சி. டி. பொன்சேகா,
மேலதிக மாவட்டப் பதிவாளர்,
மாவட்ட பதிவாளருக்காக.

கண்டி,
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
1973 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ந் திகதி.

2-255—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81

---

### கண்டி மாவட்டத்தில் கந்துகா இஹல கிழக்குப் பிரிவிற்கு பிறப்பு, இறப்பும்—உடபளாத்த பிரிவிற்கு விவாக (பொது—கண்டியர்) பதிவாளர் பதவி

கந்துகர இஹல கிழக்கு பிறப்பு, இறப்பு பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள் அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள், அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக் கூடியவர்கள், ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்கு குறையாதவர்களாயின், மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களை பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்கள், ஏனைய பிற தராதரங்கள், நிபந்தனை ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகத்திலும், கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சிச் சபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவு ஸ்தாபன நிலையங்களிலும், இந்த பிரிவிற்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்புவதோடு 1973 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

சி. சி. டி. பொன்சேகா,
மேலதிக மாவட்டப் பதிவாளர்,
மாவட்ட பதிவாளருக்காக.

கண்டி,
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
1973 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ந் திகதி.

2-253—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81

கண்டி மாவட்டத்தில் கந்துகர இஹல மேற்குப் பிரிவிற்கு பிறப்பு, இறப்பும்—உடபளாத்த பிரிவிற்கு விவாக (பொது—கண்டியர்) பதிவாளர் பதவி

கந்துகர இஹல மேற்கு பிறப்பு, இறப்பு பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள் அப்பிரிவில் சில்காலம் வசிக்கின்றவர்கள், அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக் கூடியவர்கள், ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்கு குறையாதவர்களாயின், மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களை பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்கள், ஏனைய பிற தராதரங்கள், நிபந்தனை ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகத்திலும், கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சிச் சபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவு ஸ்தாபன நிலையங்களிலும், இந்த பிரிவிற்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்புவதோடு 1973 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்பாக எனக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

சி. சி. டி. பொன்சேகா,
மேலதிக மாவட்டப் பதிவாளர்,
மாவட்ட பதிவாளருக்காக.

கண்டி,
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
1973 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ந் திகதி.

10-254—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81

---

சிறு கைத்தொழிற்றிணைக்களம்

தற்காலிக விற்பனை முகாமையாளர் பதவி

இலங்கைக் குடிகளிடமிருந்து, தற்காலிக விற்பனை முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காணப்படும் படிவத்திலமைந்த விண்ணப்பங்கள் 1973 ஒக்டோபர் 30 ந் தேதியன்றோ அதன் முன்போ என்னை வந்தடைதல் வேண்டும்.

2. சம்பள அளவுத் திட்டம்.—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத் திட்டம் ஆண்டொன்றுக்கு ரூபா 4,152—17 × 144 — 4 × 180—ரூபா 7,320 ஆகும்.

3. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—

(அ) பதவிகள் தற்காலிகமானவையும் ஓய்வூதிய சம்பள உரித்தற்றனவுமாகும். அரசாங்க சேவைச் சகாய நிதிக்கு உதவு தொகை செலுத்தப்படல் வேண்டும்.

(ஆ) அரசாங்க சேவையிலுள்ள நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் தெரிந்தெடுக்கப்படின் அவரது நியமனம் முதற்கண் ஓர் குறிப்பிட்ட காலத்திற்கு பதிற்கடமையடிப்படையிலமையும்.

4. கல்வியும் மற்றைய தகைமைகளும்.—(1) பதவியுயர்வு பெறுவோர்க்கு :—

(அ) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரமும் அல்லது சிங்களம்/தமிழ், எண்கணிதம்/கணிதம் ஆகியவையுட்பட ஆறு பாடங்களில் இரு தடவைகட்கு மேற்படாது தோற்றிப் பெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திரமும் அல்லது அதற்குச் சமமான அன்றி அதிலுயர்ந்த தகைமைச் சான்றிதழும்,

(ஆ) (1) கிராமாபிவிருத்தி, சிறுகைத்தொழிற்றிணைக்களத்தின் குடிசைக் கைத்தொழில் விற்பனை நிலையமொன்றில் உதவி முகாமையாளர் பதவியில் மூன்று வருடங்கட்கு குறையாத சேவையும், அல்லது,

(2) கிராமாபிவிருத்தி, சிறு கைத்தொழிற்றிணைக்களத்தின் மேற்பார்வைப் பதவியில் ஐந்து வருடங்கட்குக் குறையாத, தொடர்ச்சியுள்ள திருப்திகரமான சேவை.

குறிப்பு.—வர்த்தகம், விலைப்படுத்தல் ஆகியவற்றோடு தொடர்புறுப் பிரச்சினைகளைக் கையாளும் அறிவும் அனுபவமுள்ளோர்க்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(2) நேரடியாகச் சேர்பவர்கட்கு—

(அ) வர்த்தகத்திற் தகுதித் தேர்வுப் பத்திர (டிப்ளோமா) த்துக்கான இரண்டாவது பரீட்சையில் ; அல்லது,

(ஆ) பட்டயம் பெற்ற செயலாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் ; அல்லது,

(இ) கணக்குப் பதிவாளர்கட்கான உயர்தகைமைப் பரீட்சையிற் சித்தியெய்தியமை.

குறிப்பு.—ஓர் பெரிய வியாபார நிறுவனத்தில் முகாமையாளராக அல்லது நிருவாக உத்தியோகத்தராக அனுபவம் பெற்றுள்ளமை விசேட தகைமையாகக்கொள்ளப்படும்.

(3) ஒவ்வொரு விண்ணப்பதாரரும், தான்—

(அ) மிகச் சிறந்த குணப்பண்பும், உடனலமுமுள்ளவரெனவும்,

(ஆ) 1973.10.30 ம் தேதியன்று 25 வயதுக்குக் குறைந்தவரல்லரெனவும், 45 வயதுக்கு மேற்பட்டவரல்லரெனவும் (இம் மேல் வயதெல்லை, ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளோர்க்கு ஏற்புடைத்தன்று) திருப்திகரமான சான்று சமர்ப்பித்தல் வேண்டும்.

5. பின்வரும் ஆவணங்கள் எல்லாவற்றையுமோ அன்றி அவற்றில் தையாவதோ வேண்டும்போது சமர்ப்பிக்குமாறு விண்ணப்பகாரர் வேண்டப்படுவர் :—

(அ) பிறப்புச் சான்றிதழ் (கவனிக்கவும்.—ஞானதீட்சைச் சான்றிதழோ உதவி பெறும் பாடசாலைகளின் பிரமாணங்களுக்கான சட்டக் கோவையின் நோக்கத்திற்கிணங்க வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்களோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) பல்கலைக்கழகப் பட்டம் அல்லது உயர்ந்த தகைமைச் சான்றிதழ்.

(இ) இரு குணநலச் சான்றிதழ்கள்.

(ஈ) தொழின்முறை அல்லது தொழினுட்பம் அல்லது இவ்விரண்டுக்குமுரிய சான்றிதழ்கள்.

(உ) சிங்களத்திற் சித்தியெய்திய மிகவுயர்ந்த பரீட்சைக்கான சான்றிதழ்.

குறிப்பு.—1. விண்ணப்பத்துடன் ஆவணங்களோ அவற்றின் படிகளோ இணைக்கப்படலாகா.

2. வேண்டப்படும்போது ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் வேட்பாளர்களின் விண்ணப்பங்கள் கவனத்திற்கெடுக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலோ, உள்ளூராட்சி மன்றங்களிலோ கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தத்தந் திணைக்களத் தலைவர்களினூடாகவே அனுப்பப்படுதல் வேண்டும்.

7. கொழும்பில் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்குத் தமது செலவிலேயே சமூகமளிக்க விண்ணப்பகாரர் தயாராயிருத்தல் வேண்டும்.

8. விண்ணப்பத்திற் காணும் விபரங்களிலெவையாவது உண்மையற்றவையெனவும் தவறானவையெனவும், தெரிவுக்கு முன் காணப்படுமிடத்து விண்ணப்பகாரர் தகுதியற்றவராக்கப்படுவதுடன், அத்தவறு நியமனத்தின் பின் கண்டு பிடிக்கப்படின் அவர் விலக்கப்படுவார்.

9. அரசு வர்த்தமானியின் பகுதி I தொகுதி (IIஅ) ன் முற்பகுதியில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவை நியமனங்கட்குப் பொருத்தமான பொது நிபந்தனைகட்குத் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

ஜி. பி. ஹத்தொட்டுவ,
பிரதிப் பணிப்பாளர் (முகாமை),
சிறு கைத்தொழிற் பணிப்பாளருக்காக.

சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973.10.02.

### சிறு கைத்தொழிற்றிணைக்களம்

### தற்காலிக விற்பனை முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்

**கவனிக்கவும் :** விண்ணப்பங்கள் கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கும் உறையின் இடது பக்க மேல் மூலையில் " தற்காலிக பொது முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம் " எனக்குறிக்கப்பட வேண்டும்.

1. முழுப் பெயர் :————.
2. முகவரி :————.
3. பிறந்த தேதியும் இடமும் :————. (பிறப்புச் சான்றிதழின் படி இணைக்கப்பட வேண்டும்)
4. நாட்டினம் :————.
5. மணமானவரா, தனியாளா ? :————.
6. கல்வித் தகைமை அல்லது தொழிற்றுறைத் தகைமை அல்லது இவ்விரண்டும் :————.
7. கல்விக் கூடத்திலிருந்து விலகியது தொடக்கமுள்ள தொழில் அல்லது பின்பற்றிய பயிற்சி நெறிகளின் அல்லது இவ்விரண்டினதும் விபரங்கள் :————.
8. இதன் முன் அரசாங்க திணைக்களமொன்றிலோ அரசாங்கக் கூட்டுத்தாபனமொன்றிலோ தொழிலிலமர்ந்திருப்பின் அத்தொழில் நிறுத்தப்பட வேண்டிய காரணங்களைக் கூறவும் :————.
9. ஓர் நீதிமன்றத்தில் நீர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின் அக்குற்றத்தையும், அளிக்கப்பட்ட தண்டனையையும் அது பற்றிய விபரங்களையும் குறிப்பிடவும்.
10. நற்சான்றிதழ்கள் பெறப்பட்ட மூன்று பேரின் பெயர்களும், பதவிப் பெயர்களும் :————.

இந்த விண்ணப்பத்தில் என்னல் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன். இங்கு கொடுக்கப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது தவருனதாக அல்லது பிழையானதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட முன் காணப்பட்டால் தகைமை நீக்கத்திற்கும், ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பின் கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடெதுவுமில்லாப் பதவி நீக்கத்துக்கும் ஆளாவேன் என்பதை நான் அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி......................1973.

10–401—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81

---

எண் : ஆ 1/4/34

### கப்பற்றெழில் சுற்றுலா அமைச்சு

### வணிகக் கப்பற்றெழில் உதவிப் பணிப்பாளர் (வர்த்தகத்துறை) பதவி

கப்பற்றெழில் சுற்றுலா அமைச்சின் வணிகக் கப்பற்றெழில் பகுதியில் உதவிப் பணிப்பாளர் (வர்த்தகத்துறை) பதவிக்கென விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே குறித்துள்ள வகையில் விண்ணப்பங்கள் செய்யப்பட்டு, 1973 அக்தோபர் 31 ஆந் திகதியிலோ அதற்கு முன்னரோ என்னிடம் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

**கவனிக்குக.**—ஒரு விண்ணப்பம் அல்லது அத்தகைய படிவம் சம்பந்தமாக கடிதம் அஞ்சலில் காணமற் போயிற்று அல்லது தாமதமாயிற்று எனக் கூறப்படும் எவ்விதக் குற்றச்சார்த்தும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. விண்ணப்பங்களைக் கடைசி நாள் வரையில் தாமதப்படுத்தும் விண்ணப்பகாரர் தாமே அத்தாமதத்திற்குப் பொறுப்பாளிகளாவர்.

2. **தொழில் நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—பதவி நிரந்தரமானது. நியமனம் சகாயநிதி அடிப்படையிலானது.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்கான திரட்டிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :—

ஆண்டொன்றுக்கு ரூபா 6,720—12 × 360 உம் 11 × 480—ரூபா 16,320 உம் ஆகும். ஆண்டொன்றுக்கு 11,040 ரூபாவும் 14,480 ரூபாவும் பெறுமுன்னர் வினைத்திறமைகாண் தடைகளுண்டு. (1.10.1969 ஆம் திகதிக்கு முன்னிருந்த கருதிய அடிப்படை ஆண்டுச் சம்பளம் 4,080—12 × 360 உம் 10 × 480—13,200 ரூபாவாகும். 8,400 ரூபாவுக்கும் 11,760 ரூபாவுக்கும் முன்னர் வினைத்திறமை காண் தடைகளிருந்தன.)

குறிப்பு : (1) தெரிவு செய்யப்பட்ட வேட்பாளரைத் திரட்டிய சம்பள அளவுத்திட்டத்தின் அடிப்படைச் சம்பளத்திலும் பார்க்க உயர்ந்த ஒரு சம்பள நிலையில் வைக்கும் விடயம் பொது நிருவாகத் திணைக்களத்தோடு கலந்துரையாடிக் கவனிக்கப்படலாம்.

(2) இலங்கைப் பல்கலைக் கழகத்தின் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் பிற பல்கலைக் கழகத்தின் பட்டத்திற்குப் பிந்திய பட்டம்பெறும் வரைக்கும் அல்லது பெற்றுலன்றித் தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர் ஆண்டொன்றுக்கு 11,040 ரூபா சம்பளத்திற்கு அப்பால் செல்வதற்குத் தகுதியுடையவராகார். இப்பட்டத்தின் தரம் கப்பற் போக்குவரத்துச் சுற்றுலா அமைச்சின் செயலாளரால் விதிக்கப்படும்.

4. **தேவையான தகைமைகள்.**—(அ) மிகச் சிறந்த நற்பண்புடையவரென்றும் உடல் நலமுடையவரென்றும்,

(ஆ) 1973.10.31 இல் 30 வயதுக்குக் குறையாதவரென்றும் 45 வயதுக்குக் கூடாதவரென்றும் (அரசு ஊழியர்களுக்குக் கூடிய வயதெல்லை பொருந்தாது.)

(இ) நன்கு மதிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் வர்த்தகம், அல்லது பொருளியலில் 1 ஆம் அல்லது 2 ஆம் வகுப்புச் சிறப்புப் பட்டதாரியானவர் அல்லது மேற்சொன்ன பாடங்களில் ஒன்றில் கூடிய தகைமை உடையவர் என்றும், அத்துடன்

(ஈ) நன்கு மதிக்கப்பட்ட வர்த்தக நிலையம் அல்லது யாக்கம் அல்லது அரசாங்கத் திணைக்களம் ஒன்றில் வர்த்தகத் துறையில் 5 ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம் உடையவர் என்றும்

ஒவ்வொரு வேட்பாளரும் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும்.

குறிப்பு.—கப்பற்றெழில் அனுபவமிருப்பின் அது மேலதிகத் தகைமையாக அமையும்.

5. பின்வரும் சாதனங்களில் ஏதாவது ஒன்றையோ எல்லாவற்றையுமோ கேட்கும்போது சமர்ப்பிக்கும்படி வேட்பாளர் வேண்டப்படுவர் :—

(அ) பிறப்புச் சான்றிதழ். (ஞானஸ்நானச் சான்றிதழ்களோ உதவிபெறும் பாடசாலைகளுக்கான பிரமாணக் கோவையின் நோக்கத்திற்கு அமைய வழங்கப்பெற்ற பிறப்புச் சான்றிதழ்களோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.)

(ஆ) பல்கலைக் கழகப் பட்டச் சான்றிதழ் அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) இரு நற்சான்றிதழ்கள். இவற்றுள் ஒன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) தொழிலினதும்/அல்லது தொழில் நுட்பத்தினதும் தகைமைகள் தொடர்பான சான்றிதழ்கள்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்து மிக உயர்ந்த பரீட்சையின் சான்றிதழ்.

குறிப்பு : (1) சாதனங்களையோ தாதனங்களின் படிகளையோ விண்ணப்பப் பத்திரத்துடன் அனுப்புதல் கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும் போது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் வேட்பாளரின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள அல்லது யாக்கங்களிலுள்ள அலுவலர்களின் விண்ணப்பங்கள் திணைக்களங்களினதோ யாக்கங்களினதோ தலைவர்களூடாக அனுப்பப்படுதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களோ அவை சம்பந்தமான கடிதத் தொடர்புகளோ இவ்வமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டுமே யொழிய இவ்வமைச்சிலுள்ள வேறெந்த அலுவலருக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்பப்படுதல்கூடாது.

8. இவ்வர்த்தமானியின் I ஆம் பகுதி (II அ) ஆம் தொகுதியின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளைப் பார்த்துக் கொள்க.

9. விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படும்.

பீ. பி. காந்தவலை,
செயலாளர்.

கப்பற்றொழில் சுற்றுலா அமைச்சு,
54, சதாம் வீதி,
கொழும்பு 1,
1973 செத்தம்பர் 28 ஆம் திகதி.

**வணிகக் கப்பற்றொழில் உதவிப் பணிப்பாளர் (வர்த்தகத்துறை)ப் பதவிக்கான விண்ணப்பப் படிவம்**

(குறிப்பு.—விண்ணப்பம் அனுப்பப்படும் அஞ்சல் உறையின் இடப்பக்கத்து மேல் மூலையில் "உதவிப் பணிப்பாளர் (வர்த்தகத்துறை)ப் பதவிக்கான விண்ணப்பம்" என எழுதிப் பதிவு அஞ்சலில் செயலாளர், கப்பற்றொழில், சுற்றுலா அமைச்சு, அ. பெ. எண். 576, கொழும்பு என்ற முகவரிக்கு அதை அனுப்பவேண்டும்.)

1. முழுப் பெயர் :————.

2. முகவரி :————.

3. பிறந்த திகதியும் இடமும் :————.
(1973 அக்தோபர் 31 இல் வயது ஆண்டு :————மாதம் : ————நாள் :————.

4. நாட்டினம் :————.

5. விவாகமானவரா, தனியாளா ? :————.

6. கல்வித் தகைமைகள் :————.

7. தொழிற்றுறைத் தகைமைகள் :————.

8. பாடசாலையை விட்டதிலிருந்து இதுவரை பார்த்த தொழிலும்/அல்லது பயிற்சியும் :————.
(தொழிலிலமர்ந்த திகதியும் விலகிய திகதியும் விலகியதற்கான காரணங்களும் குறிப்பிடவேண்டும்.)

9. தற்போதைய வேலை :————.

10. நற்சான்றிதழ்கள் தந்தவர்களின் பெயர்களும் பதவிப் பெயர்களும் :————.

விண்ணப்பத்தில் தந்த விபரங்கள் உண்மையானவையும் செம்மையானவையுமென யான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இங்கே தந்துள்ள விபரங்களுள் எவையாவது பொய்யானவையோ சரியற்றவையோவெனக் காணப்பட்டால் தெரிவுக்கு முன்னராயின் யான் தகைமை நீக்கத்துக்கு ஆளாகலாமென்றும் நியமனம் பெற்றபின்னர் விபரச்சரியின்மை கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி வேலை நீக்கத்துக்கு ஆளாகலாமென்றும் யான் அறிந்துள்ளேன்.

————,
வேட்பாளரின் கையொப்பம்.

திகதி :————.

10-236—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81

---

**இலங்கைத் தரைப்படையில் அலுவலர்களுக்கான வெற்றிடங்கள்**

1. இலங்கைத் தரைப்படையின் சைகைச் சிறப்பணியில் அலுவலர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்கள் லெஃவ்ரினன்ற் என்ற பதவி வரிசையில் இலங்கைத் தரைப்படையில் நிரந்தர அரசாணையமர்வு வழங்கப்பெறுவர்.

3. (அ) தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்களுக்கு, அவர்களது நியமனத்தின்போது, பதவி வரிசைக்கேற்ப வேதனமும், படிகளும் பின்வருமாறு கொடுக்கப்படும் :—

லெஃவ்ரினன்ற் : ஆண்டொன்றுக்கு ரூபா 7,500—5×180—ரூபா 8,400—வரை (மாதமொன்றுக்கு ரூபா 625—5×15—ரூபா 700 வரை)

கப்ரின் : ஆண்டொன்றுக்கு ரூபா 9,240—8×180—ரூபா 10,680 வரை (மாதமொன்றுக்கு ரூபா 770—8×15—ரூபா 890 வரை)

மேஜர் : ஆண்டொன்றுக்கு ரூபா 11,400—8×240—ரூபா 13,320 வரை (மாதமொன்றுக்கு ரூபா 950—8×20—ரூபா 1,110 வரை)

லெஃரினன்ற் கேர்ணல் : ஆண்டொன்றுக்கு ரூபா 15,000—7×630 ரூபா 17,520 வரை (மாதமொன்றுக்கு ரூபா 1,250—7×30—ரூபா 1,460 வரை)

மேஜர் பதவி வரிசைக்கு அப்பால் பதவியேற்றம் தெரிவு மூலமாகும்.

(ஆ) பின்வரும் படிகள் கொடுக்கப்படற்பாலனவாகும் :

திருமணமான அலுவலர்களுக்கான படி :

மாதமொன்றுக்கு ரூபா 575 ம் ரூபா 600 க்கு குறையவும்—மாதம் ரூபா 80.00. மாதமொன்றுக்கு ரூபா 600 ம் ரூபா 625 க்கு குறையவும்—மாதம் ரூபா 82.50. மாதமொன்றுக்கு ரூபா 625 ம் ரூபா 650 க்கு குறையவும்—மாதம் ரூபா 85.00. மாதமொன்றுக்கு ரூபா 650 ம் ரூபா 675 க்கு குறையவும்—மாதம் ரூபா 87.50 மாதமொன்றுக்கு ரூபா 675 ம் ரூபா 700 க்கு குறையவும்—மாதம் ரூபா 90.00 மாதமொன்றுக்கு ரூபா 700 ம் ரூபா 725 க்கு குறையவும்—மாதம் ரூபா 92.50 மாதமொன்றுக்கு ரூபா 725 ம் ரூபா 750 க்கு குறையவும்—மாதம் ரூபா 95.00 மாதமொன்றுக்கு ரூபா 750 ம் ரூபா 775 க்கு குறையவும்—மாதம் ரூபா 97.50 மாதமொன்றுக்கு ரூபா 775 ம் அதற்குக் கூடவும்—மாதம் ரூபா 100.00,

பிற படிகள் :

(i) தொடக்க அணியடுக்குப் படி, ரூபா 1,000. (ii) கோல அணி பேணற் படி, மாதமொன்றுக்கு ரூபா 25. (iii) வெளியில் வசிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்ட, திருமணமான, திருமணமாகாத அலுவலர்களுக்குச் சொக்கருக்கான படி, மாதமொன்றுக்கு ரூபா 75. (iv) பிரிந்திருக்கைப் படி :

(1) தொடர்ச்சியாக 14 நாட்களுக்கு மேற்படாத காலவெல்லைக்கு வழமையான கடமைகளின் காரணமாக, பாசறையினுள் வசிக்கும்படி, திருமணமான அலுவலர்களுக்குக் கட்டளையிடப்பட்டிருந்தால், நாளொன்றுக்கு ரூபா 1.50.

(2) அவசரகால நிலைமைக்காகவோ அல்லது விசேட கடமைகள் காரணமாகவோ, தொடர்ச்சியாக 14 நாட்களுக்கு மேற்பட்ட காலவெல்லைக்கு பாசறையினுள் வசிக்கும்படி திருமணமான அலுவலர்களுக்குக் கட்டளையிடப்பட்டிருந்தால், நாளொன்றுக்கு ரூபா 2.

(v) பிரயாண, அத்துடன் இணைந்த படிகள், அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்களுக்குக் கொடுபடற்பாலதானவற்றுக்கு ஒத்ததாகும்.—

(இ) அலுவலர்கள் அவர்களுடைய வேதனம், எதிர்காலவாய்ப்பு, சேவை நிபந்தனைகள் என்பன சம்பந்தமாகப் பின்வரும் ஒழுங்குவிதிகளினால் ஆளப்படுவர் :

(i) 1961 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 28 ஆந் திகதிய 12,395 ஆம் இலக்கம் கொண்ட இலங்கை அரசாங்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட 1961 ஆம் ஆண்டின் தரைப்படை வேதனச் சட்டக் கோவைக்கும், காலத்துக்குக் காலம் அதற்குச் செய்யப்படும் திருத்தங்களுக்கும் இணங்க.

(ii) 1949 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதிய 10,028 ஆம் இலக்கம் கொண்ட இலங்கை அரசாங்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட 1949 ஆம் ஆண்டின் அலுவலர்களுக்கான ஒழுங்குவிதிகளுக்கும், காலத்துக்குக் காலம் அதற்குச் செய்யப்படும் திருத்தங்களுக்கும் இணங்க.

(iii) 1961 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதிய 12,680 ஆம் இலக்கம் கொண்ட இலங்கை அரசாங்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட 1961 ஆம் ஆண்டின் தரைப்படை ஓய்வூதியங்களும், பணிக்கொடைகளும் பற்றிய சட்டக்கோவைக்கும், காலத்துக்குக் காலம் அதற்குச் செய்யப்படும் திருத்தங்களுக்கும் இணங்க.

மேலும் ஏதாவது தகவல்களை கொழும்பிலுள்ள தரைப்படைத் தலைநிலையத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

4. விண்ணப்பதாரர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

(அ) நாட்டினம் : அபேட்சகர்கள் இலங்கைப் பிரசையாயிருத்தல் வேண்டும்

(ஆ) வயது : அபேட்சகர்கள் 1973.11.01 திகதியன்று 26 வயதுக்கு மேற்படாதவராயிருத்தல் வேண்டும்.

(இ) கல்வித் தகைமைகளும் உயர்தொழில் தகைமைகளும் : அபேட்சகர்கள் கீழ்க்குறிப்பிடப்பட்டவாறுள்ள தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விஞ்ஞானமாணி அல்லது விஞ்ஞானமாணி (பொறியியல்) அல்லது நன்கு மதிக்கப்பெற்ற பல்கலைக்கழகமொன்றின் 5 ஆண்டுகள் கொண்ட டிப்ளோமா பயிற்சிநெறி.

இலத்திரனியல், மின்முறை பொறியியலில் உயர்தொழில் தகைமைகளையுடையோர்க்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(ஈ) **வைத்தியத் தகைமைகள் :** அபேட்சகர்கள் தரைப்படை வைத்தியப் பரிசோதனைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(உ) **அடையாளச் சீட்டு :** அபேட்சகர்கள் தங்களை அறிமுகம் செய்வதற்குத் தகுந்த அத்தாட்சிப் பத்திரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். ஆட்பதிவுத் திணைக்களத்தினால் அல்லது அஞ்சல் அதிபதியால் வழங்கப்பட்ட அடையாள அட்டைகள், அல்லது மோட்டார் போக்குவரவு ஆணையாளரால் வழங்கப்பட்ட தகுதிப் பத்திரம் இந்நோக்கத்துக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

5. விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தைப் போன்று விண்ணப்பதாரரின் சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்டு 1973.11.01 ஆம் திகதியன்று நண்பகல் 12 மணிக்குப் பிந்தாமல், தரைப்படைத் தலைநிலையம், அ. அ. பெட்டி எண் 553, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடிதவுறையில், “அலுவலர் வெற்றிடங்களுக்கான விண்ணப்பம், இலங்கைச் சைகைச் சிறப்பணி” என எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முடிவுத் திகதிக்கும் குறிப்பிட்ட நேரத்துக்கும் பிந்தி இத்தலைநிலையத்தில் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படமாட்டா.

6. ஏற்கனவே அரசாங்க சேவையில் இருக்கும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் தம் திணைக்களத் தலைவருக்கூடாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இந்த விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்படின் அவர்கள் சேவையிலிருந்து விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழ் ஒன்றும் இணைத்தனுப்பப்படல் வேண்டும். திணைக்களத் தலைவரிடமிருந்து பெறப்படும் இச் சான்றிதழ் அனுப்பப்படாவிடில் அரசாங்கத்திலுள்ள ஓய்வூதியச் சேவை தரைப்படை ஓய்வூதியத்துடன் சேர்த்துக் கணக்கிடப்படமாட்டாது.

7. விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகள் இணைத்தனுப்பப்படல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ்;

(ஆ) கல்வித் தகைமைகளையும், உயர்தொழில் தகைமைகளையும் நிரூபிக்கும் சான்றிதழ்;

(இ) விண்ணப்பதாரருக்குத் தனிப்பட்ட முறையில் அறிமுகமான பொறுப்பு வாய்ந்தவர்களினால் வழங்கப்பட்ட குறைந்த பட்சம் இரு குணச் சான்றிதழ்கள்.

8. மேலதிகமான விண்ணப்பங்கள் பெறப்பட்டால், மேற்போந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்களில் இருந்து தொடக்கத் தெரிவு செய்யப்படும். இதன் பின் தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்கள் பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட ஒரு தெரிவுச் சபையினால் நேர்முகமாகப் பரீட்சிக்கப்பட்ட பின்னர் இறுதித் தெரிவு செய்யப்படும். நேர்முகப் பரீட்சைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்கள் அத்தகைய நேர்முகப் பரீட்சை நடக்கும் இடம், நேரம், திகதி என்பனபற்றி எழுத்து மூலம் அறிவித்தல் கொடுக்கப் பெறுவர். நேர்முகப் பரீட்சை கொழும்பில் நடாத்தப்படும். இது சம்பந்தமாக ஏற்படும் பிரயாணச் செலவுகள் அல்லது வேறு செலவுகள் இலங்கைக் குடியரசினால் கொடுக்கப்பெறமாட்டா.

9. தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்கள் இலங்கைக் குடியரசின் மொழிக் கொள்கையை நிறைவேற்றுவதற்காக, குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்காக ஏற்கனவே ஆக்கப்பட்ட அல்லது இனிமேல் ஆக்கப்படும் எவ்வித விதிகளுக்கும் இணங்கி நடக்குமாறு வேண்டப்படுவர்.

10. பதவி ஓய்வூதியத்துக்கு உரித்துடையது அல்ல. தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்கள் ஒரு சகாய நிதிக்குத் தமது உதவுதொகையாகத் தமது திரட்டிய சம்பளத்தின் ஆறு சதவீதத்தைக் கழித்தற்கு எழுத்துருவிலான தமது சம்மதத்தைக் கொடுக்குமாறு வேண்டப்படுவர். ஒரு சேவை ஓய்வூதியத்தை அல்லது பணிக்கொடையை வழங்கப்படுதலைக் குறிக்கும் 1961 ஆம் ஆண்டின் தரைப்படை ஓய்வூதியங்களும், பணிக்கொடைகளும் பற்றிய சட்டக்கோவையிலுள்ள ஒழுங்குவிதிகள் ஏற்புடையனவாகா.

எம். ஏ. ஜயவீர,
பிரிகேடியர்,
தரைப்படைத் தளபதிக்காக.

1973.10.01.

**இலங்கைத் தரைப்படையின் சைகைச் சிறப்பணியில்**
**அலுவலர் வெற்றிடங்களுக்கான விண்ணப்பம்**

1. முழுப் பெயர். (தடித்த எழுத்துக்களில்) :————.

2. நாட்டினம் (பரம்பரையான இலங்கைப் பிரசையா அல்லது பதிவு செய்யப்பட்ட இலங்கைப் பிரசையா என்பதைக் குறிப்பிடுக. பதிவு செய்யப்பட்ட பிரசையாயின் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக :———.

3. முகவரி :————.

4. பிறந்த திகதி :————. 1973.11.1 ந் திகதியன்று வயது : ———. ஆண்டு :———— மாதம் :———— நாள் :———.

5. பின்வருவோரின் பெயர், பிறந்த இடம், தற்போதைய முகவரி ஆகியவற்றைக் குறிப்பிடுக.

| | முழுப்பெயர் | பிறந்த இடம் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| (1) தந்தை | | | |
| (2) தாய் | | | |

6. நீர் திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா ?———.

7. பாடசாலையில் அல்லது சர்வகலாசாலையில் உடற்பயிற்சி விளையாட்டுக்கள் சம்பந்தமாக நீர் பெற்ற தனிச்சிறப்புகள் :— ————.

8. பாடசாலையில் அல்லது சர்வகலாசாலையில் உமக்குரிய சிறப்பாகப் பெற்ற பிறசெயல்கள் :————.

9. படைக்கலந்தாங்கிய சேவையில் அல்லது தொண்டர் படை, பயிலுநர் சிறப்பணி அல்லது சாரணர் அமைப்புமுறையில் முன்பு சேவை செய்திருப்பின் அவற்றின் விபரங்கள் :————.

10. இந் நியமனம் சம்பந்தமாக உமக்குரிய வேறு விசேட தகைமைகள் :————.

11. இதற்கு முன் படைக்கலந்தாங்கிய சேவைகளில் ஏதாவது ஒன்றிற்கு விண்ணப்பித்திருப்பின் அதன் முடிவு என்ன என்பதைக் குறிப்பிடுக :————.

12. உமது பாடசாலை, சர்வகலாசாலை பற்றிய பின்வரும் விபரங்களைத் தருக :————.

| பாடசாலை அல்லது சர்வகலாசாலையின் பெயர் | சேர்ந்த **திகதி** | விலகிய திகதி | சித்தியெய்திய பொது/ உயர்தொழில் பரீட்சைகள் |
|---|---|---|---|
| | | | |

13. பாடசாலையை அல்லது சர்வகலாசாலையை விட்டு விலகிய காலம் தொட்டு நீர் செய்த தொழில் பற்றிய பின்வரும் விபரங்களைத் தருக :————.

| தொழில் தருநரின் | தொழிலின் தன்மை | சேவை செய்தகாலம் | |
|---|---|---|---|
| | | தொடக்கம் | வரை |
| | | | |

14. குணச் சான்றிதழ்களை வழங்கியோரின் பெயர்களும், முகவரிகளும் :————.

இவ் விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்ட விபரங்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

10–310—12.10.73 திகதிய வர்த்தமானி இல. 81

### விலைமதிப்புத் திணைக்களம்

*விலைமதிப்புப் பரிசோதகர் பதவி தரம் II மீளவாய்தல்*

*இலங்கைக் குடியரசு 14.9.1973 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் பந்தி 4 (இ) யிலும் (ஈ) யிலும் குறிப்பிட்டவாறு மேற்படி பதவிக்கான கல்வித் தகைமைகள் மீளவாயப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான கல்வித் தகைமைகள் கீழ்க் குறிப்பிட்டவாறாகும் :—*

*'4 (இ) கல்விப் பொதுத் தராதரப் (சாதாரணம்) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாதவாறு தோற்றி கணித பாடத்தில் திறமைச் சித்தியுடன் (இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியில் கழகவாண்டு 1971/1972 க்கு முன்னர் கணித பாடத்தில் சாதாரண சித்தியுடன் அனுமதிக்கப் பட்டவர்கள் விண்ணப்பிக்கத் தகைமையுடையவர்களாவர்)' அல்லது ;*

*'4 (ஈ) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் கணித பாடத்தில் திறமைச் சித்தி பெற்றவர்கள் (இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியில் கழகவாண்டு 1971/1972 க்கு முன்னர் கணித பாடத்தில் சாதாரண சித்தியுடன் அனுமதிக்கப்பட்டவர்கள் விண்ணப்பிக்கத் தகைமையுடையவர்களாவர்)' அல்லது*

*மேற்படி பதவிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி 27.10.1973 வரை பின்போடப்பட்டுள்ளது.*

எல். ஓ. டீ. சில்வா,
பதிற் பிரதம விலைமதிப்பாளர்.

விலைமதிப்புத் திணைக்களம்,
கபூர் கட்டடம்—மூன்றும் மாடி,
த. பெ. இல. 561,
கொழும்பு 1, 29.9.1973.

10-345—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81.

---

### கொழும்பு மாவட்டம், சியன்ன கோறளை மதபத்து, ஊறுவல் பேருவ கிராமசபைப் பகுதிக்கான சடுதி மரண விசாரணை அதிகாரிக்கான பதவி

*கொழும்பு மாவட்டம், சியன்ன கோறளை மதபத்து, ஊறுவல் கிராமசபை பகுதிக்கான சடுதி மரண விசாரணை அதிகாரிக்கான பதவிக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.*

*கீழே தரப்படும் மாதிரி விண்ணப்பப் பத்திரப் பிரதியில் பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்கள் 1973 ம் வருடம் ஒக்டோபர் மாதம் 27 ந் திகதியிலோ அன்றி அதற்கு முன்னதாகவோ மகா இப்புல் கொட பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.*

*2. தீர்க்கமான சம்பளம் இப்பதவிக்குக் கிடையாது. திடீர் மரணங்களின்போது இடம்பெறும் ஒவ்வொரு மரண விசாரணைக்கும் ரூபா 10.00 தரப்படும்.*

***தகைமைகள்.***—*ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தாம்—*

*(அ) விண்ணப்ப முடிவு தேதியின்போது 30 வயதிற்கு மேற்பட்டவராகவும், 60 வயதிற்கு உட்பட்டவராகவும்,*

*(ஆ) சிறந்த நல்லொழுக்கமும், உடலுறுதியும் உடையவராகவும்,*

*(இ) ஊறுவல் பேருவ கிராமசபைப் பகுதியின் நிரந்தரப் பிரஜையாகவும்,*

*(ஈ) (i) 1925 ம் ஆண்டுக்கும் 1944 ம் ஆண்டுக்கும் இடையே சிங்கள பாடசாலை விடுகைப் பத்திரப் பரீட்சையில் அல்லது சிங்கள பாடத்துடன் ஆங்கில பாடசாலை விடுகைப் பத்திரப் பரீட்சையில் அல்லது சிங்கள பாடத்துடன் கல்வித் திணைக்கள கனிஷ்ட பாடசாலைப் பத்திர பரீட்சையில் சித்தியடைந்தவராகவும், அல்லது*

*(ii) சிங்களப் பாடத்துடன் சிரேஷ்ட பாடசாலைப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அல்லது அதனிலும் கூடிய பரீட்சையில் சித்தியடைந்தவராகவும் இருக்க வேண்டும்.*

*4. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப் பத்திரங்களுடன் கீழ் கோரப்படும் பத்திரங்களின் பிரதிகளையும் இணைத்து அனுப்ப வேண்டும் :—*

*(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம்.*

*(ஆ) ஆகக்கூடிய பரீட்சைத் தராதரப் பத்திரம்.*

*(இ) இரண்டு சமீபகால நற்சான்றிதழ்கள்.*

*5. அரசாங்க சேவையில் அல்லது கூட்டுத்தாபனங்களில் அல்லது உள்ளூர் ஆட்சிச் சபைகளில் அங்கத்தவராக கடமை பார்ப்பவர்களது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.*

*6. விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் இடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.*

டீ. டபிள்யு. டி. அல்விஸ்,
அரசாங்க அதிபர்,
கொழும்பு மாவட்டம்.

கச்சேரி,
கொழும்பு,
25 செப்டம்பர், 1973.

*மாதிரி விண்ணப்பப் பத்திரம்*

### கொழும்பு மாவட்டம், சியன்னகோறளை மதபத்து ஊறுவல் பேருவ கிராமசபை பகுதியில் சடுதி மரண விசாரணை அதிகாரிக்கான பதவி வெற்றிடம்

*1. முழுப் பெயர் :————. (தெளிவான எழுத்துக்களில்)*

*2. விலாசம் :————.*

*3. நிரந்தர வசிப்பிடமும், வதியும் கால எல்லையும் :————.*

*4. (அ) விண்ணப்ப முடிவு தேதியின் போது சரியான வயது : ————.*

*(ஆ) பிறந்த திகதியும், இடமும் :————.*

*5. விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா ? :————.*

*6. கல்வித் தகைமைகள் :————.*

*7. தற்போதைய தொழில் :————.*

*8. முன்பு வேறு தொழில்கள் புரிந்திருப்பின் அவற்றின் விபரம் :————.*

*9. விண்ணப்பதாரிக்கு உரிமையான ஆதனங்களின் பெறுமானமும் பரப்பும் :————.*

*10. யாருக்காவது கடன் கொடுக்குமதியாயின் அதன் விபரம் :—.*

*11. விண்ணப்பதாரி நீதி மன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டோ தண்டிக்கப்பட்டோ இருப்பின் அதன் விபரம் :————.*

*12. இப்பதவிக்குத் தேவையான வேறு தகைமைகள் இருப்பின் அவற்றைக் குறிப்பிடுக :————.*

*என்னால் மேற்கூறப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவையென்றும் உண்மையானவையென்றும் உறுதிப்படுத்துகிறேன்.*

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

10-275—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81.

**கொழும்பு மாவட்டம், சியன்னகோறளே கிழக்கு கங்கபொடபத்துவ கிராமத்திற்கான சடுதி மரண விசாரணை அதிகாரிக்கான பதவி**

கொழும்பு மாவட்டம், சியன்ன கோறளே கிழக்கு கங்கபொடபத்து பகுதிக்கு சடுதி மரண விசாரணை அதிகாரிக்கான பதவிக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே தரப்படும் மாதிரி விண்ணப்பப் பத்திரப் பிரதியில் பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்கள் 1973 ம் வருடம் ஒக்டோபர் மாதம் 27 ந் திகதியிலோ அன்றி அதற்கு முன்னதாகவோ வாகே கிரிந்துவல உதவி அரசாங்க அதிபரின் விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

2. நிரந்தரமான சம்பளம் இப்பதவிக்குக் கிடையாது. திடீர் மரணங்களின்போது இடம்பெறும் ஒவ்வொரு மரண விசாரணைக்கும் ரூபா 10.00 தரப்படும்.

**தகைமைகள் :** ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தாம்,—

(அ) விண்ணப்ப முடிவு தேதியின்போது 30 வயதிற்கு மேற்பட்டவராகவும், 60 வயதிற்கு உட்பட்டவராகவும்,

(ஆ) சிறந்த நல்லொழுக்கமும், உடலுறுதியும் உடையவராகவும்,

(இ) கிழக்கு சியன்னகோறளே கங்கொடபத்து பகுதியின் நிரந்தரப் பிரஜையாகவும்,

(ஈ) (i) 1925 ம் ஆண்டுக்கும் 1944 ம் ஆண்டுக்கும் இடையே சிங்களப் பாடசாலே விடுகைப் பத்திரப் பரீட்சையில் அல்லது சிங்களப் பாடத்துடன் ஆங்கில பாடசாலே விடுகைப் பத்திரப் பரீட்சையில் அல்லது சிங்களப் பாடத்துடன் கல்வித் திணைக்கள கனிஷ்ட பாடசாலேப் பத்திர பரீட்சையில் சித்தியடைந்தவராகவும், அல்லது

(ii) சிங்களப் பாடத்துடன் சிரேஷ்ட பாடசாலேப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சம்மான பரீட்சையில் அல்லது அதனிலும் கூடிய பரீட்சையில் சித்தியடைந்தவராகவும் இருக்க வேண்டும்.

4. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப் பத்திரங்களுடன் கீழ் கோரப்படும் பத்திரங்களின் பிரதிகளேயும் இணைத்து அனுப்ப வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம்.

(ஆ) ஆகக்கூடிய பரீட்சைத் தராதரப் பத்திரம்.

(இ) இரண்டு சமீபகால நற்சான்றிதழ்கள்.

5. அரசாங்க சேவையில் அல்லது கூட்டுத்தாபனங்களில் அல்லது உள்ளூர் ஆட்சிச் சபைகளில் அங்கத்தவராக கடமை பார்ப்பவர்களது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

டீ. டபிள்யு. டி. அல்விஸ்,
அரசாங்க அதிபர்,
கொழும்பு மாவட்டம்.

கச்சேரி,
கொழும்பு,
25 செப்டம்பர், 1973.

மாதிரி விண்ணப்பப் பத்திரம்

**கொழும்பு மாவட்டம், சியன்னகோறளே கிழக்கு கங்கபொடபத்துவ பகுதியில் சடுதி மரண விசாரணை அதிகாரிக்கான பதவி வெற்றிடம்**

1. முழுப் பெயர் :———. (தெளிவான எழுத்துக்களில்)
2. விலாசம் :———.
3. நிரந்தர வசிப்பிடமும், வதியும் கால எல்லேயும் :———.
4. (அ) விண்ணப்ப முடிவு தேதியின் போது சரியான வயது :———.
   (ஆ) பிறந்த திகதியும், இடமும் :———.
5. விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா ? :———.
6. கல்வித் தகைமைகள் :———.
7. தற்போதைய தொழில் :———.
8. முன்பு வேறு தொழில்கள் புரிந்திருப்பின் அவற்றின் விபரம் :———.
9. விண்ணப்பதாரிக்கு உரிமையான ஆதனங்களின் பெறுமானமும் பரப்பும் :———.
10. யாருக்காவது கடன் கொடுக்குமதியாயின் அதன் விபரம் :—.
11. விண்ணப்பதாரி நீதி மன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டோ தண்டிக்கப்பட்டோ இருப்பின் அதன் விபரம் :———.
12. இப்பதவிக்குத் தேவையான வேறு தகைமைகள் இருப்பின் அவற்றைக் குறிப்பிடுக :———.

என்னல் மேற்கூறப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவையென்றும் உண்மையானவையென்றும் உறுதிப்படுத்துகிறேன்.

———,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :———.

10-274—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81.

---

**கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்**

பொல்கொல்லே, கூட்டுறவுக் கல்லூரியில்

சமூகவியல் விரிவுரையாளர் பதவி

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் பொல்கொல்லே கூட்டுறவுக் கல்லூரியில் சமூகவியல் விரிவுரையாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கமைய தயாரிக்கப்பட்டு, "செயலாளர், வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சு, த. பெ. இல: 560, கொழும்பு-2" என்ற முகவரிக்கு பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும் :—

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் : 02.11.1973

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 09.11.1973

குறிப்பு.—(1) இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கமையத் தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(2) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறி விட்டது அல்லது தாமதமாகி விட்டது எனக் கூறும் குறைபாடு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பம் அனுப்புவதற்கு கடைசித் திகதி வரை பொறுத்திருப்பவர்கள் அதனல் ஆகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(3) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர் விண்ணப்பப் படிவங்களே விதிக்கப்பட்ட கால எல்லேக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டிற்குரிய அல்லது அந்நாட்டிற்கு மிகக் கிட்டவுள்ள ஸ்ரீலங்காவின் பிரதிநிதியின் அலுவலகத்துக்கு வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(4) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.—ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட ஸ்ரீலங்கா குடியரசு உத்தியோகத்தர்கள் சேவைக்குத் தகுதியான உடல்நலமுடையவர்களாக இருக்கிருர்களா என்பதை உறுதிப்படுத்துவதற்கான மருத்துவச் சோதனை செய்யும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுநரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காய கட்டணத்தையும் ஸ்ரீலங்காவிற்குப் பயணம் செய்வதற்காய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. ஒப்பந்த நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—(1) இப்பதவி நிரந்தரமானது. இந்நியமனம் சகாய நிதி அடிப்படையில் செய்யப்படும். நியமனம் பெறுபவர் அரசாங்க சேவைச் சகாய நிதிக்கு சம்பளத்தின் 6 வீதத்தினை உதவு தொகையாக அளிக்க வேண்டும். அரசாங்க உதவு தொகை அவருடைய திரட்டிய சம்பளத்தின் 9 வீதமாகும். ஏற்கனவே அரசாங்க சேவையில் நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமான பதவிகளே வகிக்கும் அபேட்சகர் ஓய்வூதிய உரிமைகளேத் தொடர்ந்து பெறுவர்.

(2) (அ) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் மூன்று வருடகாலத்திற்கு தகுதி காண் நிலேயில் வைக்கப்படுவார்கள். அரசாங்க சேவையில் நிரந்தரமான நியமனத்தை வகிக்கும் உத்தியோகத்த

ரொருவர் தெரிவு செய்யப்பட்டால் அவர் குறிக்கப்பட்ட காலத்திற்குப் பதிற் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்படுவார்.

(ஆ) அரச சேவையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் முதலில் ஒரு வருட காலத்திற்கு பதிற் கடமையாற்றும் தரத்தில் வைக்கப்படுவதுடன் உத்தியோகத்தர் தகுதியானவரெனக் கருதப்பட்டால் அதன் பின் உறுதிப்படுத்தப்படுவார். பதிற் கடமையாற்றும் காலத்தின்போது அவர் தகுதியற்றவரெனக் கருதப்பட்டால் அவரது நிலையான பதவிக்கு அவர் திருப்பி மாற்றப்படுவார்.

3. **சம்பள அளவுத் திட்டம்.**—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவு பின்வருமாறுகும் :—

ரூபா 7,800 இல் ஆரம்பமாகி வருடம் ரூபா 360 ஐக் கொண்ட 9 வருட ஏற்றங்களால் ரூபா 11,040 வரை உயரும். (இச் சம்பள அளவு 1.10.69 க்கு முன்பு இருந்த அடிப்படைச் சம்பள அளவுத் திட்டம் ரூபா 5,160—360—8,400 க்குச் சமமானதாகும்.)

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்குச் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலமுடையவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) 2.11.1973 இல் 25 வயதுக்குட்படாமலும் 40 க்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களிடமிருந்து பெறும் விண்ணப்பங்கள் வயதுக்கட்டுப்பாடு வேற்றுமையின்றிக் கவனிக்கப்படும்.)

(இ) 1. ஒரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தின் சமூகவியலில் முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு சிறப்புப் பட்டம் உடையவராயிருத்தல் வேண்டும்.

2. ஒரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் சமூகவியலில் பட்டமும், பட்டத்துக்குப் பின்னய பயிற்சிப்பட்டமும் உடையவராயிருத்தல் வேண்டும்.

குறிப்பு.—முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு சிறப்புப்பட்டமும் கற்பித்தல் அனுபவமுமுடையவர்களுக்கு விசேட கவனஞ் செலுத்தப்படும்.

(ஈ) சிங்கள மொழியிலும் ஆங்கில மொழியிலும் விரிவுரையாற்றுந் திறமை.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும் பொழுது சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கியம்** :—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது.)

(ஆ) பல்கலைக்கழகப் பட்டம் அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) குணச்சான்றிதழ்கள் இரண்டு :—இவற்றிலொன்று பாடசாலை பணிப்பாளர் அல்லது கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) உயர்தொழிற் தகைமைகள்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

பின்குறிப்பு.—1. ஒரு வித சாதனங்களும் அல்லது சாதனங்களின் பிரதிகளும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் ஆகாது.

2. சாதனங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. அரச சேவையில் அல்லது அரச கூட்டுத்தாபனங்களிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பாக திணைக்கள அல்லது அரச கூட்டுத்தாபனத் தலைவர்களூடாக அனுப்புதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும், செயலாளர், வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சு என முகவரியிட்டு அனுப்ப வேண்டுமேயன்றி இத் திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்புதல் ஆகாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ஆம் பாகம் (IIஅ) ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன ; அவற்றைப் பார்க்க.

9. எல்லா விண்ணப்பப்பத்திரங்களும் கிடைத்ததாக அறிவிக்கப்படும். விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதியிலிருந்து மூன்று வாரங்களுள் விண்ணப்பப்பத்திரம் கிடைக்கப்பட்டதாக அறிவித்தல் ஏதும் பெற்றுக் கொள்ளாவிடின் ; அதனை உடனடியாக எனது கவனத்திற்குக் கொண்டு வருதல் வேண்டும்.

ஜயந்த கலேகம,
செயலாளர்,
வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக அமைச்சு.

வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக அமைச்சு,
330, யூனியன் ப்ளேஸ்,
கொழும்பு-2,
1973 ஒக்டோபர் 02 ஆந் திகதி.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

(ஒரு வித சாதனங்களும் சாதனங்களின் பிரதிகளும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படல் ஆகாது.)

**கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்**

சமூகவியல் விரிவுரையாளர் பதவி

1. முழுப் பெயர் (**தெளிவான எழுத்தில்**) :————.

2. முகவரி (முகவரியில் ஏதேனும் மாற்றமேற்படின் உடனடியாக அறிவித்தல் வேண்டும்) :————.

3. (அ) பிறந்த திகதி :—
வருடம்———— மாதம்———— நாட்கள்————.
(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்வதற்காய கடைசித் திகதியன்று சரியான வயது :—
வருடம்———— மாதம்———— நாட்கள்————.

4. நீர் இலங்கைப் பிரசையாகப் பதிவு செய்யப்பட்டவரா அல்லது வம்சாவழியினரா ? :————.
(பதிவு செய்யப்பட்ட பிரசையாயின் பதிவுச் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக.)

5. பிறந்த இடம் :—
(அ) விண்ணப்பதாரர் :————.
(ஆ) விண்ணப்பதாரரின் தந்தை :————.
(இ) விண்ணப்பதாரரின் தந்தை வழிப்பாட்டன் :————.
(ஈ) விண்ணப்பதாரரின் தந்தை வழிப் பூட்டன் :
(விண்ணப்பதாரர் இலங்கையில் பிறந்தவராயிருந்தால் (அ) என்பதுடன் (ஆ) என்பதும் அல்லது (இ), (ஈ) இரண்டுமே நிரப்பப்படல் வேண்டும். விண்ணப்பதாரர் இலங்கையில் பிறந்தவராயில்லாதிருத்தல், (அ) என்பதுடன் (ஆ) உம் (இ) உம் அல்லது (இ) உம் (ஈ) உம் நிரப்பப்படல் வேண்டும்.)

6. (அ) பால் :————.
(ஆ) விவாகஞ் செய்தவரா, செய்யாதவரா, தாரமிழந்தவரா ? :————.

7. சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சை :—
(1) சிங்களம் :————.
(2) தமிழ் :————.
(3) ஆங்கிலம் :————.

8. 12 வயது தொடக்கம் படித்த பாடசாலைகள் அல்லது கல்லூரிகளும் வேறு நிலையங்களும் :—

| பொதுக் கல்வி | | | உயர் தொழில் கல்வி | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | தொடக்கம் | வரை | நிலையம் | தொடக்கம் | வரை |
| 1. | | | 1. | | |
| 2. | | | 2. | | |
| 3. | | | 3. | | |
| 4. | | | 4. | | |

9. உடற் பயிற்சி விளையாட்டுக்கள் சம்பந்தமாகப் பெறப்பட்ட ஏதேனும் தனிச் சிறப்புக்களினதும் விளையாட்டுத் துறையில் வகித்துள்ள ஏதேனும் பொறுப்பு வாய்ந்த பதவிகளினதும் விபரங்கள் :————.

10. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு உமக்கு இருப்பின், எந்த அளவுக்கு :————.

11. சட்ட நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் குற்றத்திற்காக உம்மீது குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அங்ஙனமாயின், வழக்கின் திகதி, இலக்கம் என்பவற்றுடன் அது பற்றிய முழு விபரங்களையுந் தருக :————.

12. கல்வித் தகைமைகளும் உயர் தொழிற் தகைமைகளும் :—
(பெறப்பட்ட சகல பட்டங்கள், விசேட சித்திகள், உயர் தொழில் தகைமைகள் என்பன பற்றிய விபரங்களை, அவற்றின் திகதிகளுடனும் வகுப்புகள் பெற்றிருந்தால் அவற்றையும் எடுத்துள்ள பாடங்களையும் நிலையங்களின் பெயர்களையும் தரவும்.)

13. தற்போதைய உத்தியோகமும் முன்னைய நியமனங்கள் ஏதேனுமிருப்பின் அவையும் :————.

(ஒப்பந்தத் திகதியும், விட்டு விலகிய திகதியும், கடைசியாகப் பெற்ற சம்பளமும் குறிப்பிடப்படல் வேண்டும்.)

| பதவிப் பெயர் | தொடக்கம் | வரை | வருடாந்தச் சமபளம் ரூபாவில் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3 | | | |

**பின்குறிப்பு.**—கீழ் உள்ள 15 ஆம் கூண்டில் அரசாங்கத்தின் கீழுள்ள ஏதேனும் சேவை முடிவிற்கான காரணங்கள் கொடுக்கப்படல் வேண்டும்.

14. விசேட தகைமைகள் :—

(விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விசேட தகைமைகளையும் அல்லது அனுபவத்தினையும் நீர் பெற்றிருக்கிறீரா ? அங்ஙனமாயின், அவை பற்றிய முழு விபரங்களையும் திகதிகளுடன் தருக. குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் விசேட தகைமைகளுக்கு வர்த்தமானி அறிவித்தலைப் பார்க்க.)

15. வேறு ஏதேனும் விபரங்கள் :————.

16. இந்த விண்ணப்பத்தில் என்னல் கொடுக்கப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன். இதில் கொடுக்கப்பட்ட விபரங்கள் பிழையானவையாகவோ அல்லது உண்மையற்றனவாகவோ தெரிவுக்கு முன்னர் கண்டு பிடிக்கப்பட்டால், விண்ணப்பத்திற்குத் தகுதியற்றவனுகக் கருதப்படுவேன் என்பதையும் தெரிவுக்குப் பின்னர் கண்டு பிடிக்கப்பட்டால் நட்ட ஈடின்றி வேலை நீக்கம் செய்யப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

விண்ணப்பதாரர் அரசாங்க உத்தியோகத்தராயின் திணைக்களத் தலைவரின் விதப்புரை.

————,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :————.

10-405—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81

---

**சிவில் வான் செலவுத் திணைக்களம்**

இறேடியோ தொழினுட்பவலர் பதவி (தரம் II)

சிவில் வான் செலவுத் திணைக்களத்தில் இறேடியோ தொழினுட்பவலர் (தரம் II) பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் கீழ் உள்ளமாதிரிப் படிவத்தினபடி தயாரிக்கப்பட்டு சிவில் வான் செலவுப் பணிப்பாளர், அ. பெ. 535, லோட்டஸ் வீதி, கொழும்பு 1 என முகவரியிடப்பட்டு 1973 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்பு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படவேண்டும்.

2. **வேதனமும் படிகளும்.**—இப்பதவிக்கான திரட்டிய வேதன அளவுத் திட்டம் பின்வருமாறு :—

ஆண்டொன்றுக்கு ரூபா 3,450/- ஆக ஆரம்பித்து ரூபா 90/- கொண்ட 12 ஏற்றங்களாக ஆண்டொன்றுக்கு ரூபா 4,530/- வரை செல்லும்.

3. **வயதெல்லை.**—1973 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராயும் 30 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்கவேண்டும். அரசாங்க சேவையில் ஏலவே உள்ள உத்தியோகத்தர்களுக்கு இவ்வயது மேலெல்லை பொருத்தமுடையதாகாது.

4. **விண்ணப்பதாரரிடம் வேண்டப்படும் கல்வித் தகைமைகளும் வேறு தகைமைகளும் :**

(அ) (i) க. பொ. த. (சாதாரணம்) வில் 6 பாடங்களில் சிங்களம்/தமிழ், ஆங்கிலம், பௌதிகவியல், கணிதம் (தூய அல்லது பிரயோக) போன்ற பாடங்களில் ஏதாவது இரண்டு தடவைகளில் சித்தி எய்தியிருக்க வேண்டும்,

அல்லது

(ii) சி. பா. ப. சையில் ஆங்கிலம், பௌதிகம், கணிதம் (தூய அல்லது பிரயோக) பாடங்களில் சித்தியெய்தியிருக்க வேண்டியது,

அல்லது

(iii) அதற்குச் சமமான அல்லது உயர்வான சான்றிதழுடன்.

(ஆ) (i) இலங்கைப் பல்கலைக்கழக கட்டுப்பெத்தை வளாகம் அல்லது வேறு ஏதாவது நன்கு மதிக்கப்பட்ட நிறுவகத்தில் இலத்திரனியல் தொழினுட்பச் சான்றிதழ் டிப்புளோமா (இறேடியோவும் தொலைத் தொடர்புப் பாடங்களுடனும் அல்லது ஏதாவது அதுபோன்ற பாடங்களுடனும்) பெற்றிருக்க வேண்டியது, அல்லது

(ii) இலண்டன் சிற்றி அன் கில்ஸ் நிறுவனத்தின் பின்வரும் சான்றிதழ்களில் ஏதாவது 4 ஏனும் அல்லது சிவில் வான் செலவுப் பணிப்பாளரால் அங்கீகரிக்கப்பட்ட சமமான ஏதாவது சான்றிதழ்.

(எ) பயிற்சிக் கணிதம்.
(பி) எந்திரவியல் விஞ்ஞானம்.
(சி) ஆரம்பத் தொலைத் தொடர்புப் பயிற்சி.
(டி) தொலைத் தொடர்புக்கான கணிதம் எ.
(இ) ஆரம்பத் தொலைத் தொடர்பு எ.
(எப்) இறேடியோவும் வடச்செய்தியனுப்புதலும் எ. (அல்லது கம்பியூட்டர்கள் எ)

5. **தொழில் நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானது. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பகாரர் மூன்றுண்டுகளுக்கு தகுதி கூர் நிலையில் இருப்பார். அத்துடன் அரசாங்க சேவை சகாய நிதியத்துக்கு உதவு தொகை செலுத்தும்படி வேண்டப்படுவார்.

குறிப்பு (i) :—அரசாங்கத்தின் கீழ் 1971.12.31 ஆம் திகதி ஒருவர் ஓய்வூதிய நன்மை கொண்ட பதவி ஒன்றில் இருப்பவர் நியமிக்கப்பட்டவிடத்து புதிய பதவியிலும் அவர் தொடர்ந்து ஓய்வூதிய நன்மையை கொண்டுள்ளவராவார்.

(ii) :—தெரிவு செய்யப்படுவர் நிரந்தரமானதும் ஓய்வூதிய நன்மை கொண்டதுமான பதவி ஒன்றை வகிக்கும் ஓர் அரசாங்க சேவையாளராக இருப்பின் அவர் தெரிவு செய்யப்பட்டதிலிருந்து ஓர் குறிப்பிட்ட காலத்துக்கு அப்பதவியில் பதில் கடமைபுரியும்படி நியமிக்கப்படுவார்.

6. விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகள் (மூலங்கள் அல்ல) இணைக்கப்பட வேண்டும். இப்பிரதிகள் விண்ணப்பகாரர்களுக்கு திருப்பி அனுப்பப்படமாட்டாது. சான்றிதழ்களினதும் ஆவணங்களினதும் மூலங்கள் நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பகாரரால் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இச் சான்றிதழ்கள் அல்லது ஆவணங்கள் எவற்றையேனும் சமர்ப்பிக்காதவிடத்து விண்ணப்பகாரர் தகைமையற்றவராகின்றார்.

(எ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**குறிப்பு**—சமயதீட்சை சான்றிதழ் அல்லது உதவி பெறும் பாடசாலை ஒழுங்கு விதிகளின் தேவைகளுக்கென வழங்கப்படும் சான்றிதழ்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது)
(பி) அதி உயர்ந்த கல்வித் தகைமைச் சான்றிதழ்.
(சி) ஒழுக்கச் சான்றிதழ்கள் இரண்டு.
(டி) முன் அனுபவம்/தொழினுட்பத் தகைமைச் சான்றிதழ்கள்.

7. அரசாங்க சேவையிலான நியமனங்களுக்கென இந்த வர்த்தமானியின் பகுதி I இன் ஆரம்பத்தில் பிரிவு (IIஅ) வெளியிடப்பட்டுள்ள பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

8. இப்பதவி தொடர்பான விண்ணப்பங்களும் அல்லது வேறு ஏதாவது தொடர்புகளும் இத்திணைக்களத்தில் சிவில் வான் செலவுப் பணிப்பாளருக்கு மட்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள வேறெந்த உத்தியோகத்தருக்கும் தனிப்பட்ட முறையில் முகவரியிட்டு அனுப்பிவைக்கப்படக்கூடாது.

சி. டபிள்யு. எம். அபொன்சோ,
சிவில் வான் செலவுப் பணிப்பாளர்.

அ. பெ. 535,
லோட்டஸ் வீதி,
கொழும்பு 1,
02.10.1973.

விண்ணப்பப் படிவம்

**இறேடியோ தொழினுட்பவலர் பதவி (தரம் II)**

1. முழுப் பெயர் :————.
(தடித்த எழுத்துக்களில்)

2. அஞ்சல் முகவரி :————.

3. பிறந்த திகதியும் வயதும் :————.

4. இலங்கைக் குடியா என்பதைக் குறிப்பிடவும்.
(i) வழிவந்த :————.
(ii) பதிவால் :————.

5. சித்தியடைந்த உயர் பரீட்சை :————.
(சித்தியடைந்த பாடங்களை குறிப்பிடவும்)

6. சித்தியடைந்த தொழினுட்பப் பரீட்சை :————.

7. அனுபவம் :————.

8. விசேட தகைமைகள் அல்லது கோரிக்கைகள் ஏதும் இருப்பின் அவற்றைக் குறிப்பிடவும் :————.

9. தற்போதைய/கடந்த காலத்தில் வகித்த பதவிகளின் விபரங்களை குறிப்பிடவும் :————.

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் சான்றுபடுத்துகின்றேன். இங்கு கொடுக்கப்பட்ட விபரங்களில் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுவதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுவதற்கும் நியமனம் பெற்றதன் பின்னராயின் எவ்வித நட்டஈடுமின்றி விலக்கப்படுவதற்கும் பாத்திரனாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

10-432—12.10.73 ந திகதிய வர்த்தமானி இல. 81.

---

**களுத்துறை மாவட்டத்தில் றைகம் கோறளை மேற்கு பி. கா. பிரிவிற்குச் சொந்தமான முங்வத்தபாகே பத்துவ மேற்கு கிராமச் சங்க இடப்பரப்புக்குள்ளும் றைகம் கோறளை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கும் திடீர் மரண விசாரணையாளர் பதவி**

களுத்துறை மாவட்டத்தில் றைகம் கோரளை மேற்கு பி. கா. பிரிவிற்குச் சொந்தமான பெல்பொல, பறகஸ்தொட, மில்வனிய, லங்கான, ஹல்தொட்ட, கெசெல்ஹேனவ, படகொட, யாலகல, கென்னத்துடாவ வெலிகல, குங்கமுவ கிராம சேவகர் பிரிவிற்குள் உள்ளடங்கும் முங்வத்தபாகே பத்துவ மேற்கு கிராமச் சங்க இடப்பரப்புக்குள்ளும், றைகம் கோரளை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கும் திடீர் மரண விசாரணையாளர் பதவிக்கென கீழ்காணும் தகுதிகளையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 1973 ம் வருடம் நவெம்பர் மாதம் 15 ம் திகதிக்கு முன் அல்லது அத்திகதியன்று "அரசாங்க அதிபர், கச்சேரி, களுத்துறை" என்ற விலாசத்திற்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

2. இப்பதவி குறிப்பிட்ட சம்பளத்தைக் கொண்டதல்ல, ஆயினும் நடைபெற்ற ஒவ்வொரு விசாரணைக்கும் ரூபா 10 வீதம் வழங்கப்படும்.

3. தகைமைகள்.—விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் கீழ்க்காணும் தகைமைகளையுடையோர் என்பதற்குத் திருப்திகரமான சான்றுகள் காட்டுதல் வேண்டும் :—

(அ) விண்ணப்ப முடிவு திகதியன்று 30 வயதிற்குக் கீழ்ப்படாமலும் 60 வயதிற்கு மேற்படாமலும்,

(ஆ) சிறந்த நற்குணமும், உடல் ஆரோக்கியமும் உள்ளவராகவும்,

(இ) மேலே கூறப்பட்ட பகுதியில் நிரந்தர வாசியாகவும்,

(ஈ) சிங்களத்தில்/ஆங்கிலத்தில் குறைந்த பட்சம் 8 ம் தரத்திலேனும் சித்தியடைந்தவராகவும்.

4. விண்ணப்பகாரர்கள் தங்கள் விண்ணப்பங்களுடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்க வேண்டும் :—

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ் ;

(இ) நற்குணம் பற்றி அண்மையில் பெற்ற இரு சான்றிதழ்கள்

5. அரசாங்க ஊழியர், கூட்டுத்தாபன ஊழியர், உள்ளூராட்சி ஊழியர், உள்ளூராட்சி மன்ற அங்கத்தவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவராவர். ஆகையால் அவர்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றமை அறிவிக்கப்படமாட்டாது.

பீ. ஜீ. புஞ்சிகேவா,
அரசாங்க அதிபர்,
களுத்துறை மாவட்டம்.

கச்சேரி, களுத்துறை,
1973 ம் ஆண்டு புரட்டாதி மீ 28 ந உ.

மாதிரி விண்ணப்பப் பத்திரம்

**களுத்துறை மாவட்டத்தில் றைகம் கோரளை மேற்கு பி. கா. பிரிவிற்குச் சொந்தமான முங்வத்தபாகே பத்துவ மேற்கு கிராமச் சங்க இடப்பரப்புக்குள்ளும் றைகம் கோரளை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கும் திடீர் மரண விசாரணையாளர் பதவி**

(1) விண்ணப்பகாரரின் முழுப் பெயர் :————.
(பெரிய எழுத்துக்களில்)
(2) முகவரி :————.
(3) நிரந்தர வசிப்பிடமும், வசித்த காலமும் :————.
(4) (அ) விண்ணப்ப முடிவு திகதியன்று சரியான வயது :————.
(ஆ) பிறந்த இடமும், திகதியும் :————.
(5) மணமானவரா அல்லது தனிநபரா :————.
(6) கல்வித் தகைமைகள் :————.
(7) நிரந்தர தொழில் :————.
(8) முன் சேவையில் இருந்திருப்பின், அவை பற்றிய விபரங்கள் :————.
(9) விண்ணப்பகாரரின் சொத்துக்களினதும், பெறுமதியினதும் விபரங்கள் :————.
(10) கடனாளியாயின் அவை பற்றிய விபரங்கள் :————.
(11) விண்ணப்பகாரர் நீதி மன்றத்தில் குற்றவாளியெனக் காணப்பட்டு தண்டிக்கப்பட்டவரா :————.
(12) விசேட உரிமைகள், கோரிக்கைகள் யாவும் இருப்பின் அவை பற்றிய விபரங்கள் :————

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

10-262—12.10.73 ந திகதிய வர்த்தமானி இல. 81.

எனது இல. பொ. நி/14/173

கல்வி அமைச்சு

பல்தொழில்நுட்ப நிலையங்களில் அதிபர் பதவிகள்

கல்வி அமைச்சின் கீழுள்ள பல்தொழில்நுட்ப நிலையங்களில் அதிபர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இங்கு தரப்பட்டுள்ள மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரங்கள் 1973.11.06 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியனவாய் செயலாளர், கல்வி அமைச்சு (பொது நிர்வாகக் கிளை), மலாய் வீதி, கொழும்பு 2 என்ற விலாசத்துக்குப் பதிவஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப் பத்திரம் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் "பல்தொழில்நுட்ப நிலையங்களின் அதிபர் பதவிகள்" எனக் குறிப்பிட வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானது. தெரிந்தெடுக்கப்படுபவர் ஏற்கனவே அரசாங்கத்தின் கீழ் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடைய பதவியொன்றை வகிக்காதவராயின் அரசாங்க சேவைச் சேமலாப நிதிக்குக் கட்டணஞ் செலுத்தவேண்டும். தெரிந்தெடுக்கப்படுபவர், நியமனத் தேதியன்று, அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையில் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடைய பதவி வகிப்பவராகில், புதிய பதவியிலும் அவ்வுரித்துக்கள் தொடர்ந்தும் கிடைக்கும். தெரிந்தெடுக்கப்படுபவர் ஏற்கனவே அரசாங்கத்தின்கீழ் பதவி வகிக்காதவராயின், முதற்கண் மூன்று வருடங்களுக்குத் தகுதிகாண் நிலையில் கடமையாற்றுவார். அரசாங்க சேவையில் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான பதவி வகிப்பவர் தெரிவு செய்யப்படின் அவரது நியமனம் ஓராண்டு காலத்துக்குப் பதிற் கடமைபுரியும் பாணியில் அமையும்.

3. **சம்பளமும் கொடைகளும்.**—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—வருடம் ரூபா 14,400—3 × 480—5 × 600—18,840. (1.10.69 ஆந் தேதியின் முன்னர் நிலவிய ஒத்த சம்பள அளவுத்திட்டம் வருமாறு :—வருடம் ரூபா 11,760—3 × 480—4 × 600—15,600).

4. **தேவைப்படும் தகைமைகள்.**—விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகள் தமக்கு உண்டென்பதை நிரூபிக்கும் அத்தாட்சிகளைச் சமர்ப்பிக்கக்கூடியவராயிருத்தல் வேண்டும்.

(அ) விண்ணப்பதாரி சிறந்த நல்லொழுக்கமும் தேகாரோக்கியமும் உடையவர் என்பது ;

(ஆ) 06.11.73 ஆந் திகதியன்று விண்ணப்பதாரி 35 வயதுக்குக் குறையாத ஆனால் 45 வயதிற்கு மேற்படாத வயதினர் என்பது (ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்க்கு இவ்வுயர் வயதெல்லை அமையாது) ;

(இ) பின்வரும் பாடங்களுள் ஒன்றில், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிற் பெற்ற பட்டமும் (1 ஆம் வகுப்பு அல்லது 2 ம் வகுப்புப் பட்டமாயின் மிக நன்று) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் அல்லது உயர் தொழில் நிலையமொன்றில் பெற்ற பட்டப்பின் பட்டம் அல்லது சமமான உயர்தொழிற்றகைமை.

1. பொருளியல்
2. வாணிபவியல்
3. எந்திரவியல்
4. விஞ்ஞானம்
5. விவசாயம்

(ஈ) (i) நிர்வாக அல்லது நிறைவேற்று பதவியிலான அல்லது இவ்விரு வகையினதான 5 ஆண்டு அனுபவம் ; அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் அல்லது சமமான நிலையமொன்றில் விரிவுரையாளராக 15 ஆண்டு அனுபவம், அல்லது

(ii) பட்டம் பெற்றபின், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் அல்லது சமமான நிலையமொன்றில் குறைந்தபட்சம் 5 ஆண்டு படிப்பித்தல் அனுபவத்துடன் நிர்வாக அல்லது நிறைவேற்று பதவியிலான அல்லது இவ்விரு வகையினதான 15 வருட அனுபவம். (பரீட்சைகளை நடாத்துதல், உதவி விரிவுரையாளர்கள், போதனாசிரியர்கள் உட்பட ஏனைய உத்தியோகத்தர்களிடையே கடமைப் பணிகளைப் பகிர்ந்தளித்தல், மதிப்பீடு நடத்துதல், பாடத்திட்டம்/நேரசூசி ஆகியன ஒழுங்கமைத்தல் ஆதிய விடயங்களில் அனுவபம் பூண்டவராய் ஒரு பிரிவுக்குப் பொறுப்பாயிருந்து விரிவுரையாளராய்ப் பணியாற்றுதலில் பெற்றுள்ள அனுபவம், நிர்வாக/நிறைவேற்று அனுபவமாக ஏற்கப்படும்), அல்லது

(iii) பட்டம் பெற்றபின் 5 ஆண்டுகளுக்குக் குறையாத காலம், கனிட்ட தொழில்நுட்ப நிலையத்தின் அதிபராக அனுபவம் பெற்றிருக்கவேண்டும், அல்லது

(iv) 1 ஆந் தரக் கல்லூரி அதிபராக அல்லது சமமான நிலையில் அல்லது அதைவிட உயர்ந்த நிலையில் நிர்வாக அனுபவத்துடன் கற்பித்தல்/அல்லது நிர்வாக அல்லது இவ்விரு வகையினதான் 15 ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(உ) சிங்களத்தில் கடமை புரியக்கூடியவராய் இருக்கவேண்டும். அல்லது நியமிக்கப்பட்டதிலிருந்து 3 ஆண்டுகளுக்குள்ளாக சிங்களத்தில் தேர்ச்சி பெறவேண்டும்.

**குறிப்பு.**—மேலே 4 ஆம் பந்தியில் வேண்டப்பட்டுள்ள தகைமைகள் எல்லாவற்றையும் பூரணமாகப் பெற்றுள்ள அபேட்சகர்கள் முன்வராவிட்டால் 4 ஆம் பந்தியின் " இ " பிரிவின் கீழ் தேவைப்படும் பட்டப்பின் பட்டம் பெறுவிடினும், தேவைப்படும் ஏனைய தகைமைகளைப் பெற்றுள்ள அபேட்சகர்களின் விண்ணப்பங்களும் சீர்தூக்கப்படும்.

5. பின்வரும் சாதனங்களுள் எதனையேனும் அல்லது எல்லாவற்றையேனும் தேவைப்படும் நேரத்தில் சமர்ப்பிக்கத் தயாராயிருத்தல் வேண்டும் :—

(அ) பிறப்புச் சான்றிதழ் (மு.கு.—ஞானஸ்நானப் பத்திரங்களும் கல்விப் பிரமாணங்களின் பிரகாரம் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் உபயோகத்தின் பொருட்டு வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா) ;

(ஆ) விண்ணப்பதாரி பெற்றுள்ள பட்டம் அல்லது ஆகக்கூடிய கல்வித் தராதரப்பத்திரம் ;

(இ) ஒழுக்கச் சான்றிதழ்கள் இரண்டு—இவற்றுள் ஒன்று கல்விப் பணிப்பாளர் அல்லது கல்லூரி ஆசிரியர் அல்லது கல்லூரி அதிபர் வழங்கியதாய் இருக்க வேண்டும் ;

(ஈ) உயர்தொழில்/தொழில்நுட்பத் தகைமை பற்றிய தராதரப் பத்திரம் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சித்தியடைந்துள்ள ஆக உயர்ந்த பரீட்சைத் தராதரப் பத்திரம்.

மு.கு.—(i) விண்ணப்பப் பத்திரத்துடன் சாதனங்களையேனும் அவற்றின் பிரதிகளையேனும் இணைத்தனுப்புதல் ஆகாது.
(ii) வேண்டப்படும் நேரத்தில் சாதனங்களைச் சமர்ப்பிக்கத்தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் கவனிக்கப்பெறா.

6. அரசாங்க சேவையில் உள்ளார் விண்ணப்பிக்கையில் தத்தம் திணைக்களத் தலைவர்கள் மூலம் விண்ணப்பிக்க வேண்டும். விதிக்கப்பட்ட தேதிக்குப் பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்கப்படா. ஆயின், உரிய காலத்தில் திணைக்களத் தலைவர்களுக்குக் கிடைத்துப் பிந்தியனுப்பிய மைக்கான ஏற்கக்கூடிய காரணங்களை அவர் தெரிவிப்பின் மாத்திரமே பிந்திவரும் விண்ணப்பங்கள் ஏற்கப்படும்.

7. விண்ணப்பப் பத்திரங்களையும் அவற்றோடு தொடர்பான சகல கடிதப் போக்குவரத்துக்களையும் கல்வியமைச்சின் செயலாளருக்கு அனுப்பவேண்டுமேயன்றி இவ்வமைச்சின் எந்த ஒரு உத்தியோகத்தரின் சொந்தப் பெயருக்கும் அனுப்பலாகாது.

8. இந்த வர்த்தமானியின் I ஆம் பிரிவின் II ஆம் பந்தியின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள, அரசாங்க சேவைப் பதவி நியமனங்கள் தொடர்பாக அமையும் பொது நிபந்தனைகளுக்கு விண்ணப்பதாரிகளின் கவனம் கோரப்படுகிறது.

9. விண்ணப்பப் பத்திரங்கள் இவ்வலுவலகத்திற் கிடைத்தவுடன் அது பற்றி விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும்.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1973 ம் ஆண்டு செப்ரம்பர் மீ 28 ந் உ.

கல்வி அமைச்சின் செயலாளர்.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

($8\frac{1}{2}'' \times 13\frac{1}{2}''$ அளவுத்தாளில் தயாரிக்கப்பட வேண்டும்)

கல்வியமைச்சின் கீழுள்ள பல்தொழில் நிலையங்களில் அதிபர் பதவிகளுக்கான விண்ணப்பம்

1. பெயர் (முதலெழுத்துக்களுடன்)—திரு/திருமதி/செல்வி :————.
2. முழுப்பெயர் :————.
3. உத்தியோக முகவரி :————.
4. சொந்த முகவரி :————.
5. (அ) இலங்கைப் பிரசையா என்ற விபரம் :————.
   (ஆ) அவ்வாறெனின் வம்சாவழி மூலமா பதிவு மூலமா :————.
6. பிறந்த தேதி :—
   வருடம் :————. மாதம் :————. நாள் :————.
7. விண்ணப்பங்கள் ஏற்கப்படும் கடைசித் தேதியன்றுள்ளபடி வயது :—
   வருடம் :————. மாதம் :————. நாள் :————.
8. தற்போது வகிக்கும் உத்தியோகம் பற்றிய விபரம்—
   (அ) பதவி :————.
   (ஆ) நிரந்தரமா தற்காலிகமா :————.
   (இ) இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதா அற்றதா :————.
   (ஈ) பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளீரா? :————.
   (உ) திணைக்களத்தின் பெயர் :————.
   (ஊ) நிலையம்/பணிபுரியும் ஸ்தானம் :————.
   (எ) திரட்டிய, ஆண்டுச் சம்பள அளவுத்திட்டம் :————.
   (ஏ) தற்போது பெறும் திரட்டிய ஆண்டுச் சம்பளம் :————.
9. கல்வித் தகைமைகள் பற்றிய விபரம்—
   (சிங்களமொழித் தேர்ச்சி/தமிழ் மொழியிற் பெற்றுள்ள தராதரம் உட்பட)

| | பரீட்சை | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |

10. உயர்தொழில் தகைமைகள் பற்றிய விபரம் :————.

| | தராதரப் பத்திரம் | தராதரப் பத்திரம் வழங்கிய நிலையம் | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |
| 5. | | | | |

11. பொதுக் கல்விகற்ற நிலையங்கள்—

| | நிலையம் | வகுப்புத்தரம் | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |
| 5 | | | | |
| 6. | | | | |
| 7. | | | | |

12. உயர்தொழில் கல்வி கற்ற நிலையங்கள்—

| | நிலையம் | பாடசாலை | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |
| 5. | | | | |

13. முன்னர் வகித்த பதவிகள்—
(சரியான தேதிகளுடன் சேவை செய்த காலக் கிரமப்படி குறிப்பிடுக)

| | திணைக்களம் | நிலையம்/உத்தியோக இடம் | பதவி | நிரந்தரமா தற்காலிகமா | தொடக்கம் | வரை |
|---|---|---|---|---|---|---|
| 1. | | | | | | |
| 2. | | | | | | |
| 3. | | | | | | |
| 4. | | | | | | |
| 5. | | | | | | |

14. ஏதாவது குற்றச்செயல் பற்றிய முறைப்பாட்டின் பேரில், நீதிமன்றத்தினால் உம்மீது குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதா? (அங்ஙனமாயின் விபரம் தருக) :————.

15. நீவிர் அரசாங்க பதவி வகிக்கையில் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டீரா ? (அவ்வாறாயின் விபரம் தருக) :————.

16. நீவிர் பணமுட்டு அற்றவரா? பணமுட்டு இருப்பின் எவ்வளவுக்கு ? :————.

17. இந்த விண்ணப்பப் பத்திரத்தில் என்னால் தரப்பட்ட விபரங்கள் உண்மையானவையும் சரியானவையும் என இத்தால் அத்தாட்சிப் படுத்துகின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களுள் எவையேனும், பொய்யானவை அல்லது பிழையானவை என்பது நான் நியமிக்கப்படுவதற்கு முன்னர் வெளியாயின தகுதியற்றவனாக்கப்படுதற்கும், நியமிக்கப்பட்டதன் பின்னர் வெளியாயின் எவ்வித நஷ்ட ஈடுமின்றி சேவையிலிருந்து விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் எனவும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

10–294—12.10.73 ந் திகதிய வத்தமானி இல. 81

---

## இலங்கை மத்திய வங்கி

### வெற்றிடங்கள்—சுருக்கெழுத்தாளர்-தட்டெழுத்தாளர்கள் (ஆங்கிலம்)

1. இலங்கை மத்திய வங்கிச் சேவையில் "உயர்பதவி வகுப் பல்லாத 2 ஆந் தர" வகுப்புக்குரிய சுருக்கெழுத்தாளர்-தட்டெழுத்தாளர்கள் (ஆங்கிலம்) நியமனங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்நியமனங்கள் தொடக்கத்தில் தற்காலிகமாகவிருக்கும்.

2. குறைந்த பட்சத் தகைமைகள்.—(i) சகல விண்ணப்பதாரர்களும் மரபுவழியாக அல்லது பதிவு மேலாக இலங்கைக் குடிமக்களாக இருத்தல் வேண்டும்.

(ii) கல்வி

(அ) சி. த. ப. பரீட்சையில் சித்தி (ஆங்கிலமொழி ஒரு பாடமாக உட்பட).

அல்லது

(ஆ) க. பொ. த. ப. (சாதாரண) பரீட்சையில் ஒரே முறையில் குறைந்தது 6 பாடங்களில் (சிங்களமொழி அல்லது தமிழ்மொழி, ஆங்கில மொழி, எண்கணிதம் அல்லது கணிதம் உட்பட) சித்தி.

(இ) ஆங்கிலத்தில் 400 சொற்கள் கொண்ட பந்தியைச் சொல்லும் போது நிமிடமொன்றிற்கு 80 சொற்கள் வேகத்தில் (5 நிமிடங்களுக்குத் தொடர்ந்து சொல்லப்படும்) சுருக்கெழுத்தில் எடுப்பதற்கும், அப்பதிவை நிமிடமொன்றிற்கு 8 சொற்கள் வேகத்தில் இயல் எழுத்தில் ஆங்கிலத்தில் எழுதுவதற்கும் ஆற்றல்; அத்துடன் 300 சொற்களுக்குக் குறையாத அச்சடிக்கப்பட்ட அல்லது தட்டச்சடிக்கப்பட்ட பந்தியிலிருந்து நிமிடமொன்றிற்கு 30 சொற்கள் வேகத்தில் தட்டச்சடிக்கும் ஆற்றல். பிழைகள் 100 சொற்களுக்கு 5 இற்கு மேற்படாது இருத்தல் வேண்டுமெனப் பரீட்சார்த்திகள் கோரப்படுவர். அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை அல்லது கல்விபுகட்டு நிலையத்தின் டிப்ளோமா தராதரம் பெற்ற பரீட்சார்த்திகளுக்கு முதலிடம் அளிக்கப்படும்.

(iii) வயது.—1973, ஒற்ரோபர், 27 ஆந் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

3. சம்பளம்.—மாதமொன்றிற்கு $\frac{\text{ரூ. 345—ரூ. 457}}{4\times 10 \text{ உம் } 6\times 12}$ அத்துடன் (மணமானவராயின்) திருமணப்படியும் வழங்கப்படும்.

4. விண்ணப்பப்படிவங்களும் மேலும் விபரங்களும் இலங்கை மத்திய வங்கி, நிறுவனத் திணைக்களத்திலிருந்து (முதலாம்மாடி—தென்கோபுரம்) பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்கள் அஞ்சல் மூலம் பெற்றுக்கொள்ள விரும்பின் சொந்த முகவரியிடப்பட்டு முத்திரையிடப்பட்ட 4" × 9" அளவினதான அஞ்சல் உறை அனுப்பப்படல் வேண்டும்.

5. விண்ணப்பங்கள், நிறுவனப்பணிப்பாளர், இலங்கை மத்திய வங்கி, அ. பெ. 590, கொழும்பு என முகவரியிடப்பட்டு, 27.10.73 ஆந் திகதியன்றோ அதற்கு முன்னரோ அவரை அடையும் வண்ணம் அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை அறிவிக்கப்பட மாட்டாது.

நிறுவனப்பணிப்பாளர்.

10-482—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

இல. 1/102/53 (ஜி)

## மொழிபெயர்ப்பாளர் சேவைக்கு ஆட்சேர்ப்பதற்காய பரீட்சை—பெப்ரவரி 1973

1973, பெப்ரவரி 24 ஆந் திகதி நடாத்தப்பட்ட மேற்கூறிய பரீட்சையின் பெறுபேறுகளின்படி மேல்வரும் பரீட்சார்த்திகள் மொழிபெயர்ப்பாளர் சேவைக்கு நியமிப்பதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| பெயர் | முகவரி |
|---|---|
| 1. கனகசிங்கம் | பொ. சு. ப. மொரவக்க சுகாதார அலுவலகம், கோட்டபொல. |
| 2. பி. வி. டி. எல். எல். சாம்சன் | 50, பாலசூரியா மாவத்த, பத்தேகம தெற்கு. கந்தானே. |
| 3. ஏ. ஏ. ஜோன் | பொ. சு. ப. பாலாவி, புத்தளம். |
| 4. எம். பி. ஜினதாச | நீரியற் பகுதி, நீர்ப்பாசனத் திணைக்களம், கொழும் 7. |
| 5. ஈ. ஏ. சி. எதிரிசூரியா | தர்மலோக கனிஷ்ட பாடசாலை, களனியா. |
| 6. பி. எச். லியனகே | கே/மபுதுகல மகாவித்தியாலயம், பெருவதந்த. |
| 7. ஆர். எஸ். ஜெயசிங்க | பெரும் பகுதி நில அளவை அலுவலகம், கண்டி. |
| 8. ஏ. ஜி. நியூட்டன் | சியம்பலககக்கொரட்டுவா, தலரம்ப, கம்புருகமுவ. |
| 9. ஏ. சி. சிவசுப்பிரமணியம் | மதிப்பீட்டாளர் திணைக்களம், நகர மண்டபம், கொழும்பு 7. |
| 10. பி. பீ. பெரேரா | பொலிசு அலுவலகம். எச்சலன் சதுக்கம், கொழும்பு 1. |
| 11. எச். டி. எல். டீ சில்வா | உள்நாட்டிறைவரித் திணைக்களம், கொழும்பு 1. |
| 12. கே. எம். என். சி. ரொட்றிகோ | த. பெ. 306, தபால் தந்தித் தொடர்பு பண்டசாலை, மருதானை. |
| 13. எல். கொலம்பகே | மாவட்ட மன்று, யாழ்ப்பாணம். |
| 14. எஸ். எம். டீ சில்வா | டெமத்தலுவா வித்தியாலயம், டெமத்தலுவா. |
| 15. எஸ். விக்கிரமாராச்சி | கலாச்சார அலுவல்கள் அமைச்சு, கொழும்பு 7. |
| 16. பி. என். ஆர். பெர்ணாந்து | 33, சமுத்திர மாவத்தை, உயன்கல, பாணந்துறை. |
| 17. கே. ஏ. யாசரட்ன | குற்ற மேல்முறையீட்டு மன்றுப் பகுதி, உயர் மன்று கொழும்பு. |
| 18. ஆர் டி. குலதிலக | 60 (அ), புலுக்ககொட, போலத்தே. |
| 19. எச். சிறிசேன | 121, "பெரமுன", கோதட்டுவ, அங்கொடை. |
| 20. கே. எம். எம். எல். டீ சில்வா | 116, சிறி குணனந்த மாவத்த, கொழும்பு 13. |
| 21. ஜி. லஷ்மன் சில்வா | 617/2, ஜெயபார, உடகமுல்ல, நுகேகொடை. |
| 22. ஜி. ஆர். ஏ. மல்லிகா | அரச கூட்டுத்தாபனப் பகுதி, திறைசேரி, கொழும்பு 1. |
| 23. என். சிவகுமாரன் | அரசாங்க நிருவாகத் திணைக்களம், கொழும்பு 7. |
| 24. டபிள்யு. எம். சேனரட்ன | பல்லே-தெல்தோட்ட வித்தியாலயம், கலஹா, கண்டிக்கு ஊடாக, |
| 25. பி. எல். பெர்ணாந்து | 76, மாக்கெட் பிளேஸ், அநுராதபுரம். |
| 26. ஏ. எம். மொகமட்மதனி | 106, ஓகொடபொல, ரூகஹவிலா. |
| 27. ஆர். பி. ஜெயரட்ன | நிறைவேற்று எந்திரி அலுவலகம், மிகிந்தலை. |
| 28. கே. சபாரட்ணம் | ஆவரங்கால், புத்தூர். |
| 29. ஏ. ஜி. ஈ. சி. சேனரட்ன | "சேனசுமா" சிறிசேமத மாவத்த, வெரஹென, மாத்தறை. |
| 30. ஜெ. சமாவீர | ஜி/மகிந்த வித்தியாலயம், காலி. |

ஆர். எம். பீ. சேனநாயக்க,
அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபருக்காக.

அரசாங்க நிருவாகத் திணைக்களம்,
(இணைந்த சேவைகள் பகுதி),
கொழும்பு 7,
1973, செத்தெம்பர் 21.

10–297—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக் களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்ட என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1973**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **ஒற்றோபர்** | 5.10.73 | வெள்ளி | 25. 9.73 | செவ்வாய் | ந.ப. 12.00 |
| | 12.10.73 | வெள்ளி | 3.10.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 19.10.73 | வெள்ளி | 10.10.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 26.10.73 | வெள்ளி | 17.10.73 | புதன் | ந.ப. 12.00 |
| **நவெம்பர்** | 2.11.73 | வெள்ளி | 24.10.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 9.11.73 | வெள்ளி | 31.10.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 16.11.73 | வெள்ளி | 7.11.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 23.11.73 | வெள்ளி | 14.11.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 30.11.73 | வெள்ளி | 21.11.73 | புதன் | ந.ப. 12.00 |
| **திசெம்பர்** | 7.12.73 | வெள்ளி | 28.11.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 14.12.73 | வெள்ளி | 5.12.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 21.12.73 | வெள்ளி | 12.12.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 28.12.73 | வெள்ளி | 19.12.73 | புதன் | ந.ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆடு ஒகத்து மீ 18 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.